ஜநவிநோதிநி.

இல. 5,6.] {மேமீ ஜூன்மீ} 1879. [புஸ்த. X.

மூன்று முக்கியநதிகள்.

இந்த இந்துதேசத்தில் சுதேசத்தரசர்கள் அரசுசெலுத்தத் துவக்கின காலம்முதல் நாளதுவரையில் இத்தேசத்தில் அரசாண்ட பல பிரபுக்களும் வடஇந்துஸ்தானமே இத்தேசத்து ராஜதானிக்கேற்ற இடமென்று தேர்ந்தெடுக்கும்படி, அது அத்தனை பெருமைபெற்றிருப்பது யாதுகாரணமென்கிறீர்கள்? அந்நாட்டில் ஊடுருவிச்சென்று நல்ல நீர்வளமும் நிலவளமுமுண்டாக்கி அந்நாட்டைச் செம்மையாய்ச் செழிக்கச்செய்திருக்கின்ற கங்காநதியின் பெருமையல்லவா?

இந்தக் கங்காநதி ஆதியில் இப்பூமிக்கு வந்த வரலாற்றைப் பற்றிய புராணகதையொன்று உண்டு: பூர்வகாலத்தில் இந்த நதி தேவலோகத்திலிருந்ததென்கிறார்கள். பின்பு அயோத்திமாநகரத்தில் அரசாண்ட சூரியவமிசத்தரசனான ஸகரனென்பவன் வெகு காலம் பிள்ளையில்லாமல் அதற்காகத் தபஞ்செய்ய, ஈசுவரகடாக்ஷத்தால் மூத்தமனையாளிடத்தில் அசமஞ்சனென்று ஒரு புத்திரனும், இளையாளிடத்தில் அறுபதினாயிரம் பிள்ளைகளும் பிறந்தார்கள். பிறகு சிலகாலங்கழித்து அந்த ஸகரசக்கரவர்த்தி அச்வமேதயாகஞ்செய்யவேண்டுமெனக்கருதி அப்படியே நடத்துகையில், அதில் அவிழ்த்துவிடப்பட்ட குதிரை காணாமற்போக, அதைத் தேடிக்கொண்டுபோன அவனுடைய அறுபதினாயிரம் பிள்ளைகளும் திரும்பிவாராமல் அப்படியே மாண்டுபோனார்கள். பின்பு அவர்களைத் தேடிக்கொண்டுபோன ஸகரனுடைய பேரப்பிள்ளையான அம்சுமானென்பவன் தன் சிற்றப்பன்மார்களெல்லாம் பாதாளலோகத்தில் நீறாய்ப்போயிருப்பது கண்டு துக்கித்துநிற்க, அப்போது ஆகாயத்தில் கருடபகவான்வந்து, தேவலோகத்திலிருந்து கங்காநதியை வரவழைத்து அதன் நீரால் இவர்களுக்குத் தர்ப்பணஞ் செய்தாலல்லது இவர்களுக்கு நற்கதிகிடைக்காதென்று சொல்லக்

கேட்டு அவன் மிகவும் விசனமடைந்து, தன்னால்கூடியவரையில் கங்கையை வவரழைக்க முயன்றான்; சாத்தியப்படவில்லை. அப்படியே அவன்காலமும் அவன் பிள்ளைகாலமும் சென்றபிறகு அவனுடைய பேரப்பிள்ளையான பகீரதனென்னும் சக்கரவர்த்தி ஒருவன் மிகக்கொடியதாய்த் தவமொன்றுசெய்து கங்கை தேவலோகத்திலிருந்து இப்பூலோகத்திற்கு வரும்படிப் பிரார்த்திக்க, அப்படியே அந்த நதி இமயமலையில் பிந்துஸரஸ்ஸென்னும் ஒரு தடாகத்தில் விழுந்தது. பிறகு பகீரதசக்கரவர்த்தி அந்த நதியைப் பாதாளலோகத்திற்குக் கொண்டுபோய்த் தம்மூதாதைகளுக்குத் தர்ப்பணஞ் செய்தானென்கிறார்கள். இப்படிக் கங்கை பகீரதனால் வரவழைக்கப்பட்டதுபற்றி பாகீரதி என்றும், சொர்க்கம் பூமி பாதாளம் ஆகிய இம்மூவுலகமும் படர்ந்ததாதலால் திரிபதகை* என்றும் அதற்குப் பெயர்வழங்குகின்றது.

இப்போது அந்தக் கங்கையானது இமயமலையில் பிந்துஸரஸ்ஸினின்றும் பெருகிவந்து கடல் நீர்மட்டத்துக்கு ஆயிரம்அடி உயரத்தில் ஹரித்துவாரத்தண்டை பூமியிற் பிரவேசித்து பிரயாகை, காசி, பாடலிபுரம், கல்கத்தா முதலிய பட்டணங்களின்வழியாய்த் தென்கிழக்கு முகமாகச் சென்று பங்காளக்குடாக்கடலிற் சேர்கின்றது. கீழ்ச்சொன்ன புராணகதையில் கண்டிருக்கிறபடி சிறந்த புண்ணியதீர்த்தமென்பதனாலோ, மழைபெய்யாமலிருக்குங்காலத்திலும் தனக்குத்தானே காலந்தப்பாமல் பெருகிவந்து, மிகவும் மதுரமாயும் நெடுநாள்வரையில் வேறுயெடுத்துவைத்திருந்தாலும் சிறிதும் கெடாமலுமிருக்கின்ற நன்னீருடையதாய், நாட்டுக்கு நன்மைவிளைவிப்பதைப்பற்றிய பெருமையினாலோ, அது புண்ணியநதியாகக் கொண்டாடப்படுகின்றது. அது பூமியிற் பிரவேசிக்குமிடமான ஹரித்துவாரம், யமுனாநதியோடு சேருமிடமான அலகாபாத்து அல்லது பிரயாகை, சிறந்த புண்ணியக்ஷேத்திரமான காசி, இப்படிப்பட்டவிடங்களில் கங்கை இன்னும் விசேஷமாகக் கொண்டாடப்படுகின்றது.

வடஇந்துஸ்தானத்திலுள்ளவர்கள் அநேகர், தம்இஷ்டர் யாராவது தேசாந்தரம் போயிருந்தால், அவர்கள் க்ஷேமமாய் வருவார்களா மாட்டார்களாவென்று சகுனம்பார்ப்பதற்காகவும் அவர்களுக்கு க்ஷேமமுண்டாகும்படிப் பிரார்த்தனையாகவும் கங்கையில் விளக்கேற்றி மிதக்கவிடுவதுண்டு. அந்த விளக்கு அப்படியே அசையாமல் மிதந்துபோமானால் அவர்களுக்கு க்ஷேமமென்றும் அமிழ்ந்து அணைந்துபோமானால் அபாயமென்றுங் கண்டுகொள்வார்கள். இப்படிப் பலவிதத்திலும் மிகப் புண்ணியநதியான கங்கைக்கரையின் அழகை இச்சஞ்சிகைப்படத்திலே பாருங்கள்.

* திரிபதகை—திரி=மூன்று, பதம்=வழி, கா=போகிறது.

இந்துக்கள் கங்காநதியை மேன்மையாய்க் கொண்டாடுவது போலவே கிறிஸ்துமதாபிமானிகளெல்லாம் துருக்கிதேசத்திலுள்ள யோர்தான் என்னும் நதியைப் புண்ணியநதியாகக் கொண்டாடுகிறார்கள். அவ்வாற்றின் மகிமையைப்பற்றிய பல கதைகளிருக்கட்டும்; அவற்றுள் முக்கியமானதென்னவெனில், அந்த நதியண்டையிலேதான் கிறிஸ்துவுக்கு ஞானஸ்நாநம் கிடைத்தது; ஆனதுபற்றியே அது மிகவும் மேன்மையாகக் கொண்டாடப்படுகின்றது. அந்த நதி மானிடருடைய பாவத்தைமட்டுமே போக்கடிப்பதில்லை; எவ்வகைத் துன்பமும் உண்டாகவொட்டாமல் மன்னுயிர்களைக் காப்பாற்றுகிறதென்றும் சிறப்பிக்கப்படுகின்றது.

அவ்வாற்றுக்குத் தீர்த்தயாத்திரையாய்ப் போகிறவர்கள் அனைவராலும் புண்ணியக்ஷேத்திரமாய்க் கொள்ளப்பட்டவிடமொன்றல்ல; சிலர் சவக்கடலினின்றும் பத்துமயில்தூரத்தில் ஓரிடத்திற்குச் செல்லுகிறார்கள். சிலர் சங்கமஸ்தலத்திற்கு நான்குமயில் தூரத்திலேதான் அவ்விடமென்கிறார்கள். ஆயினும் எல்லாவிடமும் மிகவும் அழகாயிருக்கின்றன. கிறிஸ்துநாதருக்கு ஞானஸ்நாநம் நடந்தவிடத்திலேதான் இஸ்ரவேல் ஜாதியார் அந்த நதியைக் கடந்துபோனதாகவும் சொல்லுகிறார்கள்.

இவ்விதமாகவே ஆப்பிரிகாதேசத்தார் நைல் என்னும் நதியைத் தெய்வமாகக் கொண்டாடுகிறார்கள். அப்படி அந்த ஜனங்கள் அதைத் தெய்வமாக நினைக்கக்கூடாதென்பதற்காகவே மோசே காலத்தில் அதின் ஜலமெல்லாம் ரத்தமாக்கப்பட்டதென்கிறார்கள். ஆயினும் அந்த அவர்கள் தெய்வமாகக் கொண்டாடுவதற்குச் சில சிறந்த காரணங்கள் உண்டு. இப்போது இவ்வுலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நதிகள் எல்லாவற்றுள்ளும் அமெரிக்காதேசத்து ஆமஜான்நதியே மிகப் பெரிதாகக் கருதப்பட்டிருந்தா[illegible]நதியின் உற்பத்திஸ்தானம் இன்னும் செம்மையாய்க் க[illegible]பிடிக்கப்படவில்லையாதலால், நாளளவிலே இதுதான் மிகப் பெரியநதியாய்விடுமென்று தோன்றுகிறது. மேலும் ஒரு நாளும் மழைபெய்யாத விசாலமான அந்தப் பூமியில் வருஷாவருஷம் ஒரேஅளவாய்க் குறித்தகாலத்திலேயே பெருகஆரம்பித்துப் பலநாள்வரையில் வெள்ளம்பெருகி ஆற்றோரங்களில் மிகவும் செழிப்பான படுகைகளுண்டாக்கி அத்தேசங்களைப் பண்படுத்தி வெகுகாலமாய் அத்தேசத்துக் குடிகளைக் காத்துவருவதனால் அவர்கள் அதையே தெய்வமென்று கொண்டாடுகிறார்கள்.

காலிலியோ என்பவர் செய்த சாஸ்திராபிவிருத்தி.

மனிதர்களுடைய சரித்திரங்களில், பிற்காலத்தில் ஜனங்கள் ஒருநாளும் மறவாமல் கருத்தில் தரித்துக்கொண்டிருக்கும்படியான ஒவ்வொரு விசேஷம் ஒவ்வொருகாலத்தில் நடப்பதுபோல், சாஸ்திரவிஷயங்களிலும் ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு அதிசயங்கள் உண்டாவது உண்டு. ஒவ்வொருகாலத்தில் புதிதாய் ஒவ்வொரு ஆவேசமுண்டாகி அறிவு மேன்மேலும் அபிவிருத்தியாகவும், நெடுநாளாகச் சோம்பலாய்க்கிடந்த மானிடர்களுடைய மனங்கள் திடீரென்று விழித்துக்கொண்டு வெகு ஆவலாய்த் தர்மே வேலைகளிற் புகும்படியாகவும், அப்படி மேன்மேலும் பயின்றுகொண்டுபோகையில், சாஸ்திரப்பயிற்சி செய்யத்தகுந்த நிலையும் வழியும் அமையும்படியாகவும் ஒவ்வொரு தருணங்கள் நேரிடுவதுண்டு.

அப்படிப்பட்ட தருணமொன்று 1582-௵த்தில் ஆரம்பமாயிற்றென்று சொல்லலாம். அக்காலத்திலேதான் காலிலியோ என்பவர் சாஸ்திரவிஷயமான சோதனைகள்செய்ய ஆரம்பித்து, மேல் நூற்றுண்டின் முதலிலேயும் அவ்விஷயங்களை விசேஷமாய் விருத்தி செய்துகொண்டிருந்தார். ககோளசாஸ்திரம், மகா கணிதத்தின் ஓர் பாகமான யந்திரசாஸ்திரம் ஆகிய தத்துவசாஸ்திரத்தின் இரண்டு பெரும்பாகங்களும் வெகுகாலத்திற்குமுன்னமே கண்டறியப்பட்டிருந்தாலும், நாம் கீழ்ச்சொன்ன காலத்திற்குமுன் வெகுகாலமாகச் சிறிதும் அபிவிருத்தியில்லாமலேயிருந்தன பூர்வகாலத்துச் சோதிடசாஸ்திரிகள் ஏற்படுத்திய ஏற்பாடுகளெல்லாம் அவ்வளவாய்த் திருத்தமில்லாமல், அந்தந்தக் கிரகங்களுடைய கதியை மேல்பார்வைக்குத் தோற்றுகிறவிதமாகவே ஒருவாறு நிதான[illegible]ல்லும்படியாயிருந்தனவேயொழிய வேறில்லை. கோபர்[illegible]ன்னும் ப்ரஷியா தேசத்துப் பண்டிதர் ஒருவர் இந்தக் கோளத்திற்குச் சூரியனை மையமாக்கி ஒருவித சுலபமான ஏற்பாடு முன்னமே செய்திருந்தாரென்றாலும், பேச்சுக்குமட்டும் அது ஒரு நியாயமாயிருந்ததேயொழிய, விவேகமுள்ள மனிதர்கள் அனைவரும் இது உண்மையான விஷயந்தானென்று ஆவலாய் அங்கீகரிக்கும்படி நன்றாய்த் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டப்படவில்லை. யந்திரசாஸ்திரமோ காலிலியோ காலத்திற்குமுன் இரண்டாயிரம் வருஷகாலமாய் அபிவிருத்தியில்லாமலேதானிருந்தது. காலிலியோவினுடைய வேலைகளெல்லாம் நன்றாய் முடிக்கப்பட்டபிறகு, கதிகளுக்கு உரிய நியாயங்களெல்லாம்(laws of motion) கண்டறியப்பட்டன. எவர்க்கும் எந்தவிதமான ஆக்ஷேபனையும் உண்டாகாதபடி நன்றாய்த்திரு

ஷ்டாந்தத்துடன் கொபர்னிகஸ் செய்த ஏற்பாடு உண்மையாய் நிலை நிறுத்தப்பட்டது. இவ்விதமாக இவ்விஷயங்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சேர்க்கப்பட்டு அந்த நூற்றாண்டின் பின்பாதியில் நியூடனென்னும் பண்டிதருடைய பார்வையில் கணிதசாஸ்திரத்திற்கும் யந்திரசாஸ்திரத்திற்கும் சிறந்த விவாகமொன்று நடக்கும்படியாயிற்று. இவ்விஷயத்தில் காலிலியோ செய்த உதவி எவ்வளவோ, அவர் பட்டபாடு எத்தன்மைத்தோ, அது புலப்படும்படியாகவே அவருடைய வரலாற்றை ஒருவாறு சுருக்கிக்காட்டுகிறோம்.

யந்திரசாஸ்திரத்தைக் கண்டுபிடித்தவரும் சோதிடசாஸ்திரத்தை நிலைநிறுத்தினவருமான காலிலியோ இத்தாலிதேசத்தில் பைசாநகரத்திலே 1564-ஆம் பிப்ரவரிமீ 15உ பிறந்தார். இவரும் நியூடன்போலவே வாலிபத்திலேயே வெகுசாதுரியமாய் யந்திரங்கள் கற்பனைசெய்வதில் மிகத்திறமையுடையவராயிருந்தார். இவர் பிளாரென்ஸ் என்னும் பட்டணத்தில் உயர்ந்த புத்தகங்கள் படிக்க ஆரம்பித்தார். ஆயினும் அவருடைய குடும்பத்தின் ஈனஸ்திதியினால் அவ்விடத்தில் பெரும்பிரயோசனமுண்டாகும்படிப் படிக்கக்கூடவில்லையென்றாலும், அந்த ஈனமான படிப்பையும் அவர், தமக்குப் பிற்காலத்தில் மிகுந்த பாண்டித்தியமுண்டாவதற்கு அது ஒரு உறுதியான அடிப்படையாயிருக்கும்படி, நன்றாய் ஊக்கத்தோடு வருந்திப் படித்தாராதலால், மிகத் திருத்தமாயும் சமத்காரமாயும் தட்டுத்தடையில்லாமல் பேசவும் எழுதவும் திறமையுண்டாயிற்று. ஒழிவுவேளைகளில் பாடவும் சித்திரமெழுதவும் பயின்று அவ்விரண்டிலும் நல்ல வல்லமையடைந்தார். அவற்றின் பயிற்சியை அவர் ஆயுளளவும் விடாமற் கையாடினார். இளமையிலேயே அவருடைய சாமர்த்தியங்களெல்லாம் விசேஷமாய் வெளிப்படவே, அவருடைய தகப்பனார் எந்த வருத்தமாவதுபட்டு இவனை ஒரு சிறந்த வித்தியாசாலையில் படிப்பிக்கவேண்டுமென்று தீர்மானங்கொள்ளும்படியாயிற்று. அப்படியே காலிலியோ 1581-ஆம் நவம்பர்மீ 5உ பைசாநகரத்து வித்தியாசாலையில் ஒரு மாணாக்கனாய்ப் பிரவேசித்து வைத்திய சாஸ்திரம்முதலிய சிலவற்றைக் கற்பதும் இன்னும் வேறுவிஷயங்களில் ஒருவர்க்கொருவர் சர்ச்சைசெய்வதுமாயிருந்தார்.

இப்படியிருக்குங்காலையில் 1582-ஆம்த்தில் காலிலியோ முதல் முதல் மிகவும் சிறந்த விஷயமொன்றைக் கண்டுபிடித்தார். அதாவது: ஒருநாள் பைசாநகரத்துப் பெரியகோயிலுக்குப் போனபோது, அங்கே மேல்மாடியிலிருந்து கட்டித் தொங்கவிட்டிருந்த விளக்கொன்று ஒரேஅளவாய் முன்னும் பின்னும் ஊசலாடுவதுபோல் ஆடக்கண்டார். அப்போதுதான் ஒருவன் வந்து தீபமேற்றிப்போன அதிர்ச்சியினால் அந்த விளக்கு அப்படிச் சற்றே

ஆடிக்கொண்டிருந்தது. அது அற்பவிஷயமாகட்டும், பெருத்த விஷயமாகட்டும், அந்த விளக்கு அப்படி ஒரேநிலையாய் ஆடுவதைப் பார்த்தவுடனே அவர் அவ்விஷயத்தைப் பலதடவை பரிசோதனைசெய்து திடப்படுத்தி இதைக்கொண்டு காலத்தைச் சரியாய் அளந்தறியக்கூடுமென்று அதன் உபயோகத்தையும் உடனே தெரிந்துகொண்டார். இந்த விஷயம் நெடுநாள் அவர் மனதுக்குள்ளேயே நிலைகொண்டிருந்தது; அப்படியிருக்க ஐம்பது வருஷத்துக்குப்பிறகு 1633-ஞூத்தில் சோதிடசாஸ்திர சோதனைசெய்வதற்காகக் கடிகாயந்திரம் செய்ய அதை உபயோகித்தார். ஆனால் அது அப்போது அவ்வளவு திருத்தமான கருவியாகத் தீரவில்லையென்று தோன்றுகிறது. பின்பு பெண்டுலம் என்னும் கருவியோடுகூடிய திருத்தமான கடிகாயந்திரமொன்று செய்யப்பட்டது. அது காலிலியோவின் திறமையினாலல்ல; ஹைஜன்ஸ் என்பவருடைய திறமையினாலென்றாலும், முதல்முதல் அந்தக் கருத்தைச் சாஸ்திரிகளுடைய மனதிற் புகச்செய்தவர் காலிலியோவேயொழிய வேறொருவருமல்லர்.

இதுவரையில் காலிலியோ கணிதசாஸ்திரத்திற் பயிலவில்லை. பின்பு கணிதசாஸ்திரத்தினால் சித்திரப்பயிற்சிக்கு உதவியுண்டென்று கண்டு, அதைக் கற்கவேண்டுமென்று அபேக்ஷையுடையவராகி, அங்க்கணிதமும் க்ஷேத்திரகணிதமும் பயில ஆரம்பித்து உடனே தான் அதுவரையில் செய்துவந்த சோதனைகளையெல்லாம் நிறுத்திவிட்டார். பின்பு சிலநாளைக்கெல்லாம், அப்போது அவர்க்கு வயது இருபத்தைந்துதானானாலும், அம்பல்தி என்பவருடைய சிபாரிசினாலும், அவர் கண்டுபிடித்த விஷயங்களால் அவர்க்குக் கிடைத்திருந்த பெரும்பிரசித்தியாலும் பைசாநகரத்து வித்தியாசாலையில் கணிதசாஸ்திரபண்டிதராக நியமிக்கப்பட்டார்.

இதற்குப்பின்புதான் காலிலியோ கதிகளுக்கு உரிய உண்மையான நியாயங்களை (laws of motion) ஆராய்ச்சிசெய்ய ஆரம்பித்தது; மேலும் பூமையக்கவர்ச்சியால் எவ்வகை எடையுள்ளபொருளும் ஒரேவிதமாகவே இழுக்கப்படுகின்றதென்றும், சிறிதும் பெரிதுமான பொருள்களானாலும் அவை ஆகாயத்தில் ஒரேதூரத்தில் ஒரேஅளவானகாலத்திலேயே செல்லும்; ஆனால் வாயுமண்டலத்தின் தடையினால் சிறிதளவு வித்தியாசம் உண்டானால் உண்டாகுமென்றும் நிரூபித்துக்காட்டினார். ஒருபொருள் மற்றொன்றைவிடப் பத்துபங்கு அதிகமானபளுவு உள்ளதாயிருக்குமாயின், சிறிய பொருள் நூறுகஜதூரம் செல்லுகிறகாலத்தில் பெரியபொருள் பத்து கஜதூரந்தான் செல்லுமென்று அரிஸ்தோதல் சொல்லியபடியே அப்போது இருந்த மற்றவர்களெல்லாரும் நம்பியிருந்தார்களாதலால், எவ்வளவு சிறிதும் பெரிதுமான பொருள்களானாலும் ஒரேஅள

வான தூரம் செல்ல ஒரேஅளவு காலந்தான் பிடிக்குமென்பதைக் காலிலியோ பைசாநகரத்துச் சாய்ந்தகோபுரத்தின் நுனியிலிருந்து பலதடவை திருஷ்டாந்தப்படுத்திக்காட்டியும் (காலிலியோ குறிப்பாய்க் கண்டறிந்தபடி வாயுமண்டலத்தின் தடையினல் சிறிதளவு வேற்றுமை உண்டாயிற்றேயொழிய வேறில்லை.) ஒருவரும் அதை நம்பாமற்போனார்கள்.

இப்படிப் பலவிதமாய்த் தாம் ஏற்படுத்திய புதிய சித்தாந்தத்தை அநேகர் எதிர்த்ததனால், பைசாநகரத்திலிருக்க மனமில்லாமல் காலிலியோ 1592-ஷூத்தில், கணிதசாஸ்திர பண்டிதரென்கிற பெரும்பதத்தையும் விட்டு பிளாரென்ஸ் நகரத்திற்குப் போகும்படியாயிற்று. அக்காலத்தில் காலிலியோவுக்கு பிளாரென்ஸ் நகரத்தாரான ஸால்வியதி, ஸக்ரீதோ என்னும் இரண்டு பெரிய மனிதர்களோடு நல்லபழக்கம் உண்டாயிற்று. அதனால் ஸக்ரீதோ என்பவருடைய செல்வாக்கினால் காலிலியோ பதுவாநகரத்தில் கணிதசாஸ்திரத்தலைவராய் ஏற்படுத்தப்பட்டு ஆறுவருஷகாலம் அப்படியே இருந்தார். இந்த நன்றியை மனதில் வைத்துக்கொண்டு தான் காலிலியோ பின்பு தாம் வினவிடையாகச் சாஸ்திரபுத்தகங்கள் எழுதியபோது, அதில் கேள்விகேட்பவனுக்கும் விடை கொடுப்பவனுக்கும் இவ்விருவருடைய பெயரையும் வைத்து எழுதினர்.

பிளாரென்ஸ்நகரத்திலிருந்தகாலத்தில் பைசாவிலிருந்ததைவிட அதிக சுதந்திரமாயிருந்துகொண்டு கணிதவிஷயமாயும் யந்திரவிஷயமாயும் பல சிறுபுத்தகங்கள் எழுதினார்; மிகவும் உபயோகமான பற்பல விஷயங்களை நூதனமாய்க் கண்டுபிடித்தார்; தெரியாமலிருந்த அநேக விஷயங்களைத் தெரியக்காட்டினார்; தேர்மாமீட என்னும் சீதோஷ்ணங்களை அளக்கும் ஒருவிதக் கருவியையும், கம்பஸ் என்னும் ஒருவித அளவைக்கருவியையும் ஏற்படுத்தினார். இந்தக்காலத்திலேதான் அவர் கொபர்நிகஸ் என்பவர் ஸ்தாபித்த ககோளநிலையைப் பரீக்ஷிக்கப் புகுந்தார்; பின்பு தூரதிருஷ்டிக்கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டபிறகு, இதுதான் சத்தியமான நிலையென்று நிச்சயமாய்த் தோன்றி அதை எங்கும் பிரசித்தமாய்ச் சொல்லத் துணிவுடையவரானார். 1599-ஷூத்தில் கணிதசாஸ்திர பண்டிதரென்கிற பட்டம் பின்னுமொரு ஆறுவருஷத்திற்கு ஸ்தாபிக்கப்பட்டது. 1604-ஷூத்தில் புதிதாய் நக்ஷத்திரமொன்று ஆயுலிய நக்ஷத்திரத்தைச்சேர்ந்ததாய் மிகவும் அற்புதமான பிரகாசத்தோடு திடீரென்று ஆகாயத்தில் காணப்பட, காலிலியோ அதை நன்றாய் ஆய்ந்துபார்த்து, இது ஆகாயத்தில் மற்றக் கிரகங்கள் எல்லாவற்றையும்விட வெகுதூரத்தில் இருக்கிறதென்று எடுத்துக்காட்டினார். அப்படி அவர் எடுத்துச்சொன்னது அவர்களுடைய மதக்கோட்பாட்டுக்கும் நக்ஷத்திரமண்ட

லத்தில் ஒருபோதும் ஒருவிதமான மாறுபாடும் உண்டாவதில்லை யென்னும் அரிஸ்தோதலினுடைய கொள்கைக்கும் விரோதமா யிருக்கவே, அங்கிருந்த மற்றச் சாஸ்திரிகளுக்கும் அவர்க்கும் அதைப்பற்றி மனஸ்தாபம் உண்டாயிற்று. 1609-ஹூத்தில் உலகத்திற்கு மிகவும் உபயோகமான தூரதிருஷ்டிக் கண்ணுடியும், நக்ஷத்திரமண்டலத்தை ஆராய்வதற்கு அது செய்யும் உதவியும் கண்டறியப்பட்டது. இவ்விதமான கருவியொன்று முதல் முதல் உலாந்தாக்காரன் ஒருவனுல் செய்யப்பட்டதென்கிருர்கள். காலிலியோ வெனிஸ்நகரத்தில் இருக்குங்காலையில் தூரத்துப்பொருளைச் சமீபத்தில் காணும்படியான கருவியொன்று ஏற்பட்டிருக்கிறதென்கிற இச்செய்தியைக் கேள்விப்பட்டு, உடனே அந்த விஷயத்திலேயே மனதைச்செலுத்தி, பின்பு தாமே அப்படிப்பட்ட தூரதிருஷ்டிக்கண்ணுடியொன்று சிறிதாகச்செய்து முடித்தார். இப்படி அவர் கண்டுபிடித்த விசித்திரமான கருவியின் பெருமையைக் கேட்டு அப்பட்டணத்துப் பெரியமனிதர்களெல்லாம் அதன் அருமையைக் காணும்படி எப்போதும் அவர் வீட்டுவாயிலில் வந்து நிறைந்திருந்தார்கள். வரவர தூரத்துப்பொருள் வெகு நன்ருகத் தெரியும்படி அந்தக் கருவியை அவர் மிகவும் சீர்ப்படுத்தி, அப்படிப்பட்ட கருவியொன்றை வெனிஸ்நகரத்துச் சகலகலாசாலைத் தலைவர்களுக்குப் பரிசாகக்கொடுக்க அதை அவர்கள் மிகவும் கொண்டாடி ஏற்றுக்கொண்டு, கணிதசாஸ்திர பண்டிதரென்னும் பட்டத்தை அவர்க்கு ஆயுளளவும் ஸ்தாபித்து 650 ரூபாயாயிருந்த அவர் சம்பளத்தையும் 1,225 ரூபாயாக விருத்தி பண்ணினுர்கள்.

தூரதிருஷ்டிக் கண்ணுடியின் மாதிரியை முதல் முதல் ஏற்படுத்தியது ஒரு உலாந்தாக்காரனென்ருலும், பின்பு அதை நக்ஷத்திரமண்டலத்தைச் சோதிப்பதற்குத் தகுந்த கருவியாகக் கண்டதும், சோதிடசாஸ்திரத்தைப்பற்றிய பல நூதனவிஷயங்களைக் கண்டுபிடிப்பதற்கேற்ற கருவியாக ஏற்படுத்தினதுமாகிய இவற்ருலுண்டான பெருமையெல்லாம் காலிலியோவினுடையவைதானே. அந்தக் கருவியின் துணையைக்கொண்டு காலிலியோவினுல் சந்திரமண்டலத்திலுள்ள மேடுபள்ளங்களும், சூரியமண்டலத்திலுள்ள புள்ளிகளும், சுக்கிரனுடைய கலைகளும் நன்ருய்க் கண்டறியப்பட்டன. மேலும் அந்தக் கருவியைக்கொண்டு செம்மையாய் ஆராய்ச்சிசெய்ததில், கிரகங்களெல்லாம் பூரணமானவையென்றும் மாறுதலற்றவையென்றும் அரிஸ்தோதல் சொல்லிய சித்தாந்தம் சரியல்லவென்றும், இந்த நவக்கிரகமண்டலத்திற்குச் சூரியனே மையமெனவும் பூமியும் மற்றக் கிரகங்களைப்போலவே அதைச் சுற்றியோடுகிறதெனவும் கொபர்னிகஸ் ஏற்படுத்திய சித்தாந்தமே சரியானதென்றும் காலிலியோவுக்குத் தெளிவாய்த் தெ

ரியவந்தது. தெரியவரவே, விரோதிகளிடத்தில் தமக்கிருந்த பகையினாலும் கோபத்தினாலும், இன்னும் அவ்விஷயங்களை உறுதியாய்த் தாங்கி நன்றாய் நிரூபித்துக்காட்டினார். இதுகாரணமாகவே அவர்க்குச் சீக்கிரத்திலே குருபீடத்தாரோடு விரோதமுண்டாகி அவர்கள் அவனைக் குற்றவிசாரணை செய்யும்படி நேரிட்டது. இக்காலத்தில் காலிலியோ கண்டுபிடித்த பல விஷயங்களிலும் மிகவும் சிறந்தது பிரஹஸ்பதி நக்ஷத்திரத்திற்குச் சில உபக்கிரகங்கள் உண்டென்று கண்டறிந்தது. 1610-ளூத்தில் தம்முடைய தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கருவியாகக்கொண்டு முதல் முதல் அவற்றுள் மூன்றுநக்ஷத்திரங்களைக் கண்டறிந்தார்; பின்னும் விடாமல் அப்படியே அநேகம் ஆராய்ச்சிகள் செய்து உலகத்திற்குப் பலநன்மைகளை விளைவித்தார்.

பின்பு காலிலியோ தஸ்கனிநாட்டரசனுடைய வேண்டுகோளுக்கிசைந்து பதுவாநகரத்தைவிட்டுப் பிளாரென்ஸ் நகரம்போய்ச்சேர்ந்தார். ஆனால் பதுவாநகரத்தில் சகலகலாசாலையாரால் மிகவும் மேன்மையாக மதிக்கப்பட்டுக் கண்ணியமும் செல்வாக்குமாய் நடந்ததுபோல பிளாரென்ஸ்நகரத்தில் அவர்க்குச் சாயவில்லை. அவருடைய சுவாதீனத்திற்கே குறைவுநேரிட்டது. அரசனுடைய அணைவு இருந்ததென்றாலும் அது மதத்துவேஷத்தால் அவர்க்கு உண்டான சங்கடங்களைத் தடுக்கமாட்டவில்லை. யார் அவரிடத்திற்குவந்தாலும், அவர் பிரசித்தமாய்த் தாங்கிக்கொண்டுவருகிற கீழ்ச்சொல்லிய கொபர்னிகஸ் என்பவருடைய சித்தாந்தத்தை மறுத்துப் பேசிக்கொண்டேவந்தார்கள். அந்தச் சித்தாந்தம், அத்தேசத்தார் அனைவரும் கையாண்டுவந்த கிறிஸ்து வேதத்திற்கு மிகவும் விரோதமாயிருந்ததுபற்றி, யாவருக்கும் மனவருத்தமுண்டாக்கிற்று. அப்படி அனைவரும் ஒரேமுகமாய்த் தன்னை எதிர்ப்பதைக்கண்டு காலிலியோ, வேதபுத்தகம் ஆத்துமா கடைத்தேறுவதற்கு வேண்டியவிஷயங்களையே சொல்லவந்தவையென்றும், அப்படிப்பட்ட விஷயங்களெல்லாம் நாம் யுத்தி புத்திகளால் விசாரித்தறியத்தக்கவையல்லவென்றும், நம்முடைய யுத்தி புத்தி விவேகம் நியாயம் முதலியவைகளைக்கொண்டே ஆராய்ந்தறியத்தக்க விஷயங்களைப்பற்றி அவையொன்றும் சொல்லவந்தவையல்லவென்றும் இப்படி ஒரு கடிதமெழுதி அரசனுக்கே அனுப்பி அந்த விரோதத்தை அடக்கமுயன்றார்; அதுவும் பயன்படாமற்போயிற்று. இந்த விஷயத்தைப்பற்றி அவர் எழுதிய வாக்கியத்தின் கருத்தை அடியில் எடுத்துக்காட்டுகிறோம்:

"வேதத்தின் முக்கியமான கருத்தெல்லாம் மன்னுயிர்கள் மோக்ஷம்பெறுவதற்கு அவசியமான விஷயங்களைத் தெரிவிக்க வேண்டுமென்பதேயென்று நன்றாய்த் தெரியவருகின்றது. அந்த விஷயங்களெல்லாம் பிராணிகளுடைய புத்திக்கெட்டாதவையா

தலால், அவை பெரியோருடைய முகத்தினின்றும் உண்டான வையென்பது ஒன்றுமாத்திரத்தினுலேயே தவிர மற்றெந்த விதத் தாலும் நாம் அவற்றைக் கவுரவப்படுத்த நியாயமில்லை. எல்லா விஷயங்களையும் நாமே அறிந்துகொள்ளும்படி நமக்குப் புலன்களை யும் பேசுந்திறமையையும் விவேகத்தையும் தந்தருளின கடவு ளே அவற்றின் உபயோகத்தை நாம் உபேக்ஷைசெய்யவேண்டு மென்றும், அவைகளே நமக்கு யாவற்றையும் அறிவிக்கப் போது மானவையாயிருக்க, அவற்றைக்கொண்டு நாம் யாதொரு அறி வையும் தேடக்கூடாதென்றும் கருதினுரென்றுல் அதை நாம் எப்படி நம்புகிறது? மற்றவிஷயங்கள் இருக்கட்டும்; சோதிட சாஸ்திரத்தைப்பற்றி இரண்டோரிடத்தில் சூரியன், சந்திரன், சுக்கிரன் இவைகளுடைய பெயர்தவிர மற்றெதுவும் வேதத்தில் சொல்லப்படவில்லையென்றுல், அப்படிப்பட்ட சாஸ்திரவிஷயங் களில் அந்த வேதம் எப்படிப் பிரமாணமென்று நம்பலாம். ஆத லால், நாம் இந்தப் பிரபஞ்சத்தைப்பற்றி ஆராயவேண்டுமென்றுல், அதற்கு வேதத்திற் சொல்லியவிஷயங்களை நாம் சிறிதும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. நமது யுத்தி புத்திகளையும் தகுந்த நிருபணங்க ளையும் நியாயங்களையும் கொண்டு நன்றுய் ஆராய்ந்து உண்மைகளை அறிந்துகொள்ளவேண்டுமென்றே புலப்படுகின்றது. ஆதலால் இந் தப் பிரப்ஞ்ச்விஷயத்தில், நமது புத்தி விவேகங்களுக்கும் நியாயத் திற்குமேற்க எது உண்மையென்று தெளிவாய்த் தெரியவருகிறதோ அந்தவிஷயத்தில் நாம் சிறிதும் சந்தேகங்கொள்ளக்கூடாது."

இப்படியிருக்க, 1615-ஆு பிப்ரவரிமீ 25உ காலிலியோ வைப்பற்றி விசாரணைநடந்து, இப்பூமி அசைவற்றதல்லவென் றும், இந்தக் ககோளத்திற்கு மையமல்லவென்றும், இப்படிப் பட்ட சித்தாந்தங்கள் வேதத்திற்கு விரோதமானவையென்றும், இனி இப்படிப்பட்ட கருத்தை அவர் கொண்டிருக்கக்கூடாதென் றும் பிரசித்தப்படுத்தப்பட்டது.

1617-ஆுத்தில் அவர் இனி நாம் இந்த எதிரிகளோடு போ சாடாது சும்மாயிருக்கிறதென்று தீர்மானித்து, பதினுறுவருஷ காலம் இந்தக் ககோளத்தினுடைய நிலைக்குவேண்டிய பலவித மான உதாரணங்களைச் சேர்த்தெழுதுவதே வேலையாயிருந்தார். அப்படிப்பட்ட புத்தகமொன்று நன்றுய் எழுதிமுடித்ததும் அதைப் பிரசுரஞ்செய்யும்படி உத்தரவுபெற்றுக்கொண்டு பிரசுரப் படுத்தினுர். அந்தக் கிரந்தங்கள், நாம் கீழேசொன்ன சக்ரீதோ என்பவர் சாதாரணமான கேள்வி சந்தேகம் முதலியவற்றை உண் டாக்கித் தூண்டவும், சால்வியதி என்பவர் சாஸ்திரசம்பந்த மான விடைகள் கொடுத்துவரவும், மற்றொருவர் மதாந்தரசம் பந்தமான ஆக்ஷேபம் முதலியவற்றைச் செய்யவும் இப்படியாக ஒரு சம்பாஷணைரூபமாய் எழுதப்பட்டன.

இந்தப் புத்தகத்தைப் பிரசித்தப்படுத்தவே, அவ்விடத்தார்க்கு அவரிடத்திலிருந்த ஆக்கிரகம் இன்னும் அதிகமாயிற்று. அவர் அந்தக் கிரந்தத்தில் சிம்பிலிசியஸ் என்னும் ஒரு மூன்ருவதுமனிதனை ஏற்படுத்தி அவர் ஆக்ஷேபணைசெய்வதாகப் பாவித்துத் தம் மதத்தைநன்ருய்ப்பரிகாசஞ்செய்திருக்கிருரென்றெண்ணிப் போப் என்னும் மதாசாரியர்கூட அவரிடத்தில் கோபங்கொண்டார். அதனுல் 1633-ஷுத்தில்காலிலியோவை ரோமாபுரிக்கு வரவழைத்தார்கள். அப்போது அவர் தள்ளாதவரென்றும், வயதானவரென்றும், தேகமனுகூலமில்லாதவரென்றும் இப்படி என்னகாரணஞ் சொல்லியும் ஒன்றும் பயன்படாமல் கடைசியில் அவர் மிகவும் தள்ளாமையோடு அவ்விடத்திற்குப் போகும்படியாயிற்று.

அவ்விடத்து விசாரணையில் நடந்த சங்கதிகளை எடுத்துரைக்க இங்கிடமில்லை. விசாரணைசெய்த தீர்ப்பு 1633-ஷு ஜூனீமீ 22உ பிரசித்தப்படுத்தப்பட்டது. அந்தத் தீர்ப்பில், 1615-ஷுத்தில் ஒரு விசாரணை நடந்ததும், அந்த விசாரணையில் இலேசான சிக்ஷையொன்று அவர்க்கு விதிக்கும்படித் தீர்மானமானதும், அந்தத் தீர்ப்பையும் மீறி அவர் தான் பிடித்ததையே பிடிவாதமாகக் கொண்டு தன்னுடைய சித்தாந்தத்தைப்பற்றிக் கிரந்தமும் ஒன்று எழுதிப் பிரசுரஞ்செய்து அனைவர்க்கும் மனவருத்தமுண்டாக்கியதுமாகிய இவற்றையெல்லாம் செப்பி, இப்படியெல்லாம் இருந்தும், இப்போது இவர், இதுவரையில் தான் மதவிரோதமாய்ச் செய்த செய்கைகளெல்லாம் பிசகானவைதாமென்று தன்னைத் தானே நிந்தித்து மனப்பூர்வமாய்ப் பிரமாணம்பண்ணிச் சொல்லுகிறபடியால், இவர் செய்த பிழைகளெல்லாம் மன்னிக்கப்பட்டன; ஆயினும் இனிமேல் இவர் இவ்விதமானசெய்கைகள் செய்யத் துணியாமல் இருப்பதற்காகவும், மற்றவர்க்கும் இவ்விஷயத்தில் கொஞ்சம் அச்சம்உண்டாயிருப்பதற்காகவும் இவர்க்குச் சிறிதளவாவது சிக்ஷைவிதிக்கவேண்டுமென்று, அவர் எழுதிய புதுப்புத்தகத்தை இனிமேல் பிரசுரஞ்செய்யக்கூடாதென்றும், அவர் லகுவாயே ஒரு சிறையிலிருக்கவேண்டுமென்றும் இப்படியாகப் பிரசித்தப்படுத்தப்பட்டது.

1633-ஷு ஜூன்மீ 22உ காலிலியோ துக்கத்தைக்குறிக்கும் உடையொன்றை உடுத்தி மினர்வா என்னும் ஞானதேவதையின் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுபோகப்பட்டார். அங்கே அந்தச் சுவாமியின் முன்னிலையில் கீழ்ச்சொன்ன தீர்ப்பைப் படிக்க, காலிலியோ முழங்காலிட்டு வணக்கத்துடன் அதைக் கேட்டுக் கொண்டிருந்து, அதைப் படித்தானதும் தான் அதுவரையில் கொண்டிருந்த, பூமி தனக்குத்தானே தினந்தோறும் ஒருதரம் சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றி ஓடுகிறதென்றும், சூரியன் நிலையானதென்றும் இவ்விதமான கொள்கையை விட்டுவிடுவதாகப்

பொறுமையாய்ச் சொல்லி அதில் கையெழுத்து செய்தார். உடனே அவரைச் சிறைச்சாலைக்குக் கொண்டுபோனார்கள். ஆயினும் தீர்ப்பு நிறைவேற்றினபடியே அவர்க்குச் சிக்ஷை நடத்தப்படவில்லை; அந்தச் சிறையில் நாலைநாலுநாள் வசித்ததும், அவர் தனக்கு மிகவும் நேசரான ஒரு ராஜகுருவின் மாளிகையில் வசித்துக்கொண்டிருக்கும்படியாக விடப்பட்டார். டிசம்பர்மீ முதலில் போப் என்பவர் பிளாரென்ஸ்நகரத்துக்குச் சமீபமானவிடங்களில் யதேச்சையாய்ச் சஞ்சரிக்கலாமென்று அவர்க்கு அனுமதிகொடுத்தாரென்றாலும், அப்போதும் அவர்களுடைய காவல்மட்டும் ஒழியவில்லை. இப்படி அவர்கள் மானபங்கமாக நடத்தினது காலிலியோவுக்கு மனம் மிகவும் புண்படும்படியாயிற்று. இவ்வளவெல்லாம் இருந்தும் அவர் தன்னுடைய சாஸ்திரப்பயிற்சியைப்பற்றிய முயற்சியைமட்டும் கைவிடவில்லை. அதுவரையில் தான்கண்ட விஷயங்களை மேன்மேலும் விருத்திசெய்வதும் புதுவிஷயங்களைக் கண்டுபிடிப்பதுமாயிருந்தார். கடைசியில் தனக்குத் தெய்வகதியால் கண்கெட்டு எழுத்தைப் பார்க்கக்கூடாமற்போமளவும், பிரஹஸ்பதியின் உபக்கிரகங்களைப்பற்றிய கணக்குகளை ஓயாமல் கணித்துப்பார்த்துக்கொண்டேயிருந்தார். இப்படியாகத் தன் வாழ்நாள் முழுதும் இந்த ஈசுவரசிருஷ்டியில் உண்டான அதிசயங்களைக் கண்டு ஆநந்தித்தே காலங்கழித்து, தனக்கு எழுபத்தெட்டாம் வயதான 1642-ஆ ஜனவரிமீ 9உ பரலோகஞ்சென்றார். இவர் இவ்வளவுதூரம் வருந்தி ஸ்தாபித்த சித்தாந்தம் சீக்கிரமே சீரழிந்துபோகுமென்று பயந்துதானோ கடவுள் உடனே அவ்வருஷத்திலேயே சிறந்த சாஸ்திரபண்டிதரான நியூடனென்பவரைக் காலிலியோவுக்குப் பிந்தியபண்டிதராக இவ்வுலகத்தில் அவதரிப்பித்தது!

மெழுக்குவர்த்தியும் கொழுப்புவர்த்தியும்.

முன் ஒருகாலத்தில் ஒரு பெரியபட்டணத்திலே மெழுக்குவர்த்தியொன்றிருந்தது. அதற்குத் தன்நிலைமை இவ்வளவென்று நன்றாய்த்தெரியும்; நான் பிறப்பிலே மெழுகு; பின்பு என்னை அச்சிலே வர்த்தியாக வார்த்தார்கள். என்னுடைய பிரகாசமோ மிகவும் அதிகம். மற்றவர்த்திகளைவிட நான் நெடுநேரம் நீடித்து எரிவேன். எனக்கு இருப்பிடமோ சிறந்த வெள்ளிப்பீடங்கள், கண்ணாடி விளக்குகள், லஸ்டர்முதலியவையாம் என்றிப்படி ஒருநாள் அந்த மெழுக்குவர்த்தி சொல்லிக்கொண்டிருந்தது.

அதுகேட்டு அதனண்டையிலிருந்த கொழுப்புவர்த்தி ஒன்று, உன்நிலை மிகவும் ஏற்றமான நிலைதான்; வெகு அழகாயிருக்கிறது.

நான் வெறுங்கொழுப்பேயொழிய வேறல்ல; கொழுப்பில் என்னைத் தோய்த்து வைத்திருக்கிறார்கள். ஆயினும் அப்போதைக்கப் போது எண்ணெய்விட்டு ஏற்றுகிற விளக்கைவிட நம்முடைய நிலை சிறந்ததல்லவாவென்று நினைத்து அவ்வளவோடு நான் அகமகிழ்ந்து கொண்டிருக்கிறேன். எட்டுதரம் கொழுப்பிலே தோய்த்து என்னை உருவேற்படுத்தியிருக்கிறார்கள்.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க"

என்பது பெரியோர்களுடைய கொள்கையல்லவா? ஆனால் பிறப்பிலேயே மெழுக்காயிருப்பது மிகவும் உயர்ந்தநிலைதான். உலகத்தில் ஒரேபதவி யாவர்க்கும் கிடைக்குமா? உலகத்தில் எல்லோரும் ராஜாவாகவேண்டுமென்றால் எப்படியாகிறது! நீ சிறந்த சபைகளுக்கும் மண்டபங்களுக்கும் போவாயானால், நான் இங்சே மடப்பள்ளியில் இருக்கிறேன். மடப்பள்ளியும் அவ்வளவு தாழ்வான இடமன்று, மலையிலே விளைந்தாலும் உரலிலேயே மசியவேண்டும் என்கிறபடி, யாவரும் உயிர்வாழ்வுக்கு முக்கியாதாரமான உணவுபெறவேண்டிய இடம் இந்த மடப்பள்ளிதானே என்றது.

அதுகேட்டு மெழுக்குவர்த்தி, நீ சொல்வது சரிதான்; ஆனால் உணவைப்பார்க்கிலும் சிறந்தது வேறொன்று உண்டு. அதென்னவென்கிறாயோ? விநோதமாய் நேசர்களோடு கூடிக்கலந்து பேசுதல். அப்படிப்பட்டவிடங்களிலே போய்ப் பிரகாசிப்பது எவ்வளவு மேன்மையானது! இன்று ராத்திரி இங்கே பாட்டுக்கச்சேரி நடக்கப்போகிறது; அதற்காக என்னையும் என் இனத்தாரையும் விசேஷமாய் வரவழைப்பார்கள் என்றது.

இப்படி அது சொல்லிமுடிப்பதற்குமுன்னமே மெழுக்குவர்த்திகள் பல கொண்டுவரப்பட்டன; கொழுப்புவர்த்திகளும் சில தேவையாயிருந்தன. அவ்வீட்டுக்காரி, சில கொழுப்புவர்த்திகளையெடுத்துக்கொண்டு மடப்பள்ளிக்குப்போகையில், வழியிலே ஒரு சிறுவன் கையில் ஒரு கூடையை வைத்துக்கொண்டு நிற்கக் கண்டு, அந்தக் கூடைநிரம்ப அவனுக்குக் கிழங்குவகைகளும் பழவகைகளும் கொடுத்துப் பின்பு, குழந்தாய், போகும்போது நீ இந்த வர்த்தியையும் கையில் எடுத்துக்கொண்டுபோ; உன் தாயார் இராத்திரி நெடுநேரம் வேலைசெய்துகொண்டிருக்கிறாளல்லவா? அதனால் இது அவளுக்குக் கொஞ்சம் உதவியாகுமென்றாள்.

இப்படி அவள் பேசுகையில் அவள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அவளுடைய சிறுமகளொருத்தி 'இராத்திரி நெடுநேரம்' என்ற பேச்சைக் கேட்டுச் சந்தோஷத்தால் மனம்பொங்கி, நான் கூட இராத்திரி நெடுநேரம் வேலைசெய்யவேண்டும். இன்று ராத்திரி இங்கே பாட்டுக்கச்சேரியல்லவா! அதற்காக நான் அழகாய் இப்போது சிங்காரித்துக்கொள்ளவேண்டும் என்றாள்.

அப்போது தோன்றிய அம்மகளின் முகத்தழகை என்னென்று சொல்லலாம்! ஆநந்தமே வடிவெடுத்துவந்ததுபோல் அவளுடைய முகம் பளபளப்பாய்ப் பிரகாசித்தது. சந்திரபிம்பம்போன்ற அம்முகத்தின் ஒளியைப்பார்த்த கொழுப்புவர்த்தி, ஆஆ! இம்முகமலரைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களுடைய பாக்கியமல்லவோ பாக்கியம்; இது என் மனதினின்றும் ஒருநாளும் மறவாது. இப்படிப்பட்ட பொருளை நான் இனி என்றைக்குக் காணப்போகிறேன்; ஒருநாளுமில்லை என்றிப்படிச் சிந்திக்கலாயிற்று.

பின்பு அந்தச் சிறுவன் அவ்வர்த்தியைக் கூடையில் எடுத்துவைத்துக்கொண்டு வீட்டுக்குப் போய்விட்டான்; போகும்போது வழியில் அந்த வர்த்தி சிந்தித்ததாவது: இப்போது எனக்கு என்னதசை வந்துவிட்டது! இப்போது நான் எளியவர்களின் வீட்டுக்கல்லவோ போகிறேன்! அங்கே உட்கார நமக்கு ஒரு பித்தளைப் பீடங்கூடக் கிடைக்குமோ கிடைக்காதோ? மெழுக்குவர்த்தியோ பொன் வெள்ளிகளாற்செய்த பீடங்களில் உட்கார்ந்துகொண்டு உயர்ந்தவர்களுடைய கூட்டத்தையெல்லாம் பார்க்குமே; அப்படிப்பட்ட கூட்டத்தின் நடுவே பிரகாசிப்பதென்றால் எவ்வளவு பெருமையாயிருக்கும்! மெழுக்காய்ப்பிறக்காமல் கொழுப்பாய்ப் பிறக்கும்படி நேர்ந்த தலைவிதியை அல்லவோ நாம் இப்போது வெறுத்துக்கொள்ளவேண்டும் என்றிப்படி எண்ணமிட்டுக்கொண்டேபோயிற்று.

அந்த வர்த்தி எளியவர்களுடைய வீடுபோய்ச் சேர்ந்தது. அது ஒரு செல்வவானுடைய வீட்டுக்கெதிரே ஒரு சிறிய சந்திலே ஒரு கூரைவீடு. அவ்வீட்டுக்காரியோ ஒரு கைம்பெண்; அவளுக்கு குழந்தைகள் மூன்று. அவ்வீட்டுக்காரி அந்த வர்த்தியைப் பார்த்துச் சந்தோஷமடைந்து, இதை எனக்குக் கொடுத்தனுப்பிய சீமாட்டிக்கு ஒரு வந்தனமப்பா; அவள் சுகமாக வாழக்கடவள் என்று அவளை வாழ்த்தி, இந்தச் சிறந்தவர்த்தி இராத்திரி வெகுநேரம் எரியுமல்லவா என்றுசொல்லிப் பொழுதுபட்டதும் அந்த வர்த்தியில் தீகொளுத்திவிட்டாள்.

சீ! சீ! இதென்ன துர்க்கந்தம்! ஐயோ! இப்படிப்பட்ட நாற்றச்சீலையாலேயா நமக்கு ஒளிகொளுத்தவேண்டும்! அந்தச் சீமானுடைய வீட்டில் இப்படியா இருக்கும். சிறந்த நூல்வர்த்திகள் வாங்கித் தேங்காயெண்ணெயில் நனைத்து அதனாலல்லவா மெழுக்குவர்த்திகளுக்கு விளக்கேற்றுவார்கள் என்று சொல்லி, தனக்கு ஒரு நாற்றச்சீலையால் ஒளிகொளுத்தினதைக்கண்டு கொழுப்புவர்த்தி மிகவும் விசனப்பட்டது. அந்தச் சீமானுடைய வீட்டிலும் மெழுக்குவர்த்திகளைக் கொளுத்திவிட்டார்கள். அங்கே விளக்கேற்றினது சூரியோதயமானதுபோல் அந்த வீதியெல்லாம் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்தது. இன்னும் சிலநிமிஷங்களுக்கெல்லாம்

பல பிரபுக்கள் தருந்த ஆடையாபரணங்கள் அணிந்துகொண்டு சிறந்த வண்டிகளிலேறி அவ்விடத்தில் வந்து நிறைந்தார்கள். உடனே பாட்டும் ஆரம்பமாயிற்று.

அதைக் கேட்டுக் கொழுப்புவர்த்தி, ஒகோ! அங்கே நாடகம் ஆரம்பமாய்விட்டதேயென்று சொல்லி, இவ்வுலகத்திலேயே இணையொன்றுமில்லையெனச் சொல்லும்படியான எதிர்வீட்டுச் சீமாட்டியின் முகத்தழகை நினைத்துக்கொண்டு, ஆ ஆ! இனி நான் அந்த ஒளியை என்றைக்குக் காணப்போகிறேன் என்று மிகவும் துக்கிக்கலாயிற்று.

இப்படியிருக்க அவ்வீட்டுச் சிறுபெண் ஒருத்தி தன் அக்காள் தம்பிகளோடு அவ்விளக்கண்டைவந்து, இப்போது நமது வீட்டில் என்னசிறப்பு நடக்கப்போகிறது தெரியுமா? அதை நான் என்னென்று சொல்வேன்! சுடச்சுடப் பக்குவஞ்செய்த வள்ளிக் கிழங்கு இப்போது நமக்குப் பலகாரமாய் வரப்போகிறது. அதை நாம் எல்லாருங்கூடிச் சந்தோஷமாய்ப் புசிப்பது எவ்வளவு விநோதமாயிருக்கும் என்றாள்.

ஆநந்தத்தால் அம்மகளுடைய கண்மலர்கள் அதிக பளபளப்பாய்ப் பிரகாசித்தன. அதுகண்டு அந்த வர்த்தி, ஓ! இந்தப் பெண்ணினுடைய முகத்தழகும் நேற்று நாம் பார்த்த சீமாட்டியின் முகத்தழகுக்குக் குறைந்திருக்கவில்லையே! அந்த முகத்தில் எவ்வளவு களிப்பும் உற்சாகமும் தோன்றினவோ, அவ்வளவு இம்முகத்திலும் தோன்றுகின்றது. அவர்கள் பரமான்னம்முதலான சிறந்தபோஜனங்களைப் புசிப்பதனால் எவ்வளவு பெருமையடைவார்களோ, அவ்வளவு இவர்களுக்கும் இந்தக் கிழங்கைப் புசிப்பதில் உண்டாயிருக்கிறது என்றிவ்வாறு எண்ணமிட்டு மனக் களிப்பாகவே அது எரிந்துகொண்டிருந்தது.

சிறிதுநேரத்தில் அவர்களெல்லாரும் வள்ளிக்கிழங்குகளும் உருளைக்கிழங்குகளும் கொண்டுவந்து விநோதமாய்ப் புசிக்க ஆரம்பித்தார்கள். அது அவர்களுக்கு எவ்வளவு இனியபண்டமாயிருந்தது! சிறந்தவிருந்து புசிப்பதுபோலப் புசித்தார்களேயொழிய வேறில்லை. பின்பு பழங்களைப் புசிக்க ஆரம்பித்தார்கள்; அப்போது அந்தப் பிள்ளைகளெல்லாம் கோலாகலமாய்த் தம்மிடத்தில் அவ்வளவு கிருபைசெய்த கடவுளைப் போற்றிக்கொண்டே பொழுதுபோக்கினார்கள்.

அப்படி யாவரும் சந்தோஷமாய்ப் புசித்தானதும் குழந்தைகளெல்லாம் படுத்துத் தூங்கிப்போயின. பிள்ளைகள் தூங்கினதும் அவ்வீட்டுக்காரி விளக்கண்டையில் உட்காந்து இரவில் வெகுநேரம் தன் வேலையைச் செய்துகொண்டிருந்தாள். அவ்வீட்டுக்கெதிரில் அந்தச் சீமானுடைய வீட்டிலோ, வெகு அழகாய் விளக்குகள் இன்னும் பிரகாசித்துக்கொண்டிருந்தன; மிகவும் மதுர

மாகச் சங்கிதமும் பாடப்பட்டது. இந்தச் சிறப்பெல்லாம் ஒரு புறத்தில் இருக்கட்டும்; உயர்ந்தவன் தாழ்ந்தவனென்கிற வேற்றுமையில்லாமல் எங்கும் ஒரேரீதியாய்ப் பால்போலக் காய்ந்த நிலவின் அழகே யாவரும்கண்டு கொந்தளிக்கும்படியாயிருந்தது.

இம்மாலைப்பொழுது மிகவும் மகிழ்ச்சியுண்டாக்குகின்றது; ஆனல் நம்மைவிடச் சீமான்வீட்டிலுள்ள மெழுக்குவர்த்திக்கு மகிழ்ச்சி அதிகமோ என்னவோ என்பதுதான் கொஞ்சம் கவலையாயிருக்கின்றது; நான் முழுதும் எரிந்துபோவதற்குள் அது எனக்குத் தெரிவதெப்படி என்றிவ்வண்ணம் ஆலோசித்துக்கொண்டே அந்த வர்த்திமுழுதும் எரிந்துபோயிற்று.

வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்ருற் போகா—விருந்தேங்கி
நெஞ்சம் புண்ணுக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்.

பூச்சிகள் மேல்தளங்களில் ஊர்வது எப்படி.

மிகவும் மிழமழப்பான சுவர்களில் மேல்நோக்கியாகட்டும், அல்லது நமது வீடுகளின் மேல்தளங்களில் தலைகீழாகவேயாகட்டும்; பலவிதமான பூச்சிகளும் புழுக்களும் ஈக்களும் வெகு சுலபமாய் ஊர்ந்துபோக நாம் பலதடவைகளில் சாதாரணமாய்க் கண்டிருக்கிறேமல்லவா? மேலும் மேல்தளங்களில் தலைகீழாய் நிற்பதே அவைகளுக்கு மிகவும் அனுகூலமான நிலையாகக் காணப்படுகின்றது. ஏனெனில், அவை மிகவும் ஒடுக்கமானவிடத்தையே தேடுகின்றவையாதலால், சூடாக்கப்பட்ட காற்று ஓயாமல் கிழிருந்து மேலே கிளம்பிக்கொண்டிருப்பதுபற்றி மற்றவிடங்களைவிட மேல்தளம் மிகவும் ஒடுக்கமாயிருக்குமாதலால் அவைகளுக்கு அதுவே ஏற்ற இருப்பிடமாகும்.

சிறுஜந்துக்கள் இப்படித் தலைகீழாக நடப்பது எப்போதும் நமது கண்முன்னே நடக்கிற காரியமானதுபற்றி நமக்கு வெகு சாதாரணமாய்ப்போனபடியால், இம்மாதிரியாக ஒரு ஜந்து அதிக சுறுசுறுப்புடன் வெகு வேகமாய் ஒரு அபாயமும் உண்டாகாமல் ஓடுவது எவ்வளவு புதுமையும் அதிசயமுமான செய்கையென்பதைச் சிறுவர்களாகட்டும் பெரியோர்களாகட்டும் ஒருவரும் சற்று நின்று நிதானித்துப்பார்ப்பதில்லை. அப்படிச் செய்ய முயலவாவது நம்மால்கூடுமா? முயன்ருல் விழுந்து மண்டையுடையவேண்டுவதுதான். செம்மையாய்க் கண்ணுக்குத் தெரியாமல் பூமிக்குள் ஒரு பாழியில் மறைந்திருக்கும் ஒரு பொருளைக் கொஞ்ச

நேரம் நாம் குனிந்துபார்த்துக்கொண்டிருந்தாலுங்கூட, நமது தேகத்தில் எவ்வளவு வருத்தமுண்டாகி நம்மைச் சுபாவப்படியே நிற்கச்செய்கிறது!

சிலவருஷங்களுக்குமுன்னே வித்தைக்காரனொருவன் ஒரு வித விநோதமான வித்தைசெய்யக்கண்டது இப்போது நினைவு வருகின்றது. அந்த வித்தைக்காரன் தலைகீழாய் நடப்பதில் மிக்க வல்லவனென்றார்கள். இது என்ன அதிசயம்! தலைகீழாய் எப்படி நடக்கிறதென்று அந்த விநோதத்தைப்பார்க்க அதிக ஆவலுடன் நான் அவ்விடத்திற்குச் சென்றேன். அந்த வித்தையை அவன் நடத்தியவிதம் எப்படியெனில், தரைக்குமேல் இருபதடி உயரத்தில் ஒருபெரிய துலமொன்று கட்டி, அந்தத் துலத்தில் ஒரே அளவாய் இடைவெளிவிட்டுத் தோலினால் பல வளையங்கள் கட்டித் தொங்கவிட்டு, அந்த வளையங்களில் ஒன்றைவிட்டு மற்றொன்றில் காலைவைத்துக்கொண்டு தலைகீழாக வெகு வருத்தப்பட்டு நடந்துபோனான். அப்போது அணுவளவு பிசகினாலும் அவன் கீழே விழுந்துபோவான். இவ்விதமாகத்தான் அவன் தான்செய்த பிரதிக்கினையை நிறைவேற்றினது.

சிறிதளவாயினும் சாமர்த்தியமில்லாமல் அந்த வித்தையை நடத்துவது கூடாதுதான். இப்படிப்பட்டவைகளுக்கெல்லாம் தந்திரமே முக்கியமாய் வேண்டுவது. அந்த வித்தையைப் பார்த்தவர்களுள் அநேகர், அது வெகு வருத்தப்பட்டுச் செய்கிற காரியமென்றும், அவ்வளவு விநோதமானதல்லவென்றும் நினைத்தேயிருக்கமாட்டார்கள். மிகவும் அற்புதமான விசித்திரச்செய்கையென்று சொல்லி மிகவும் கொண்டாடியிருப்பார்கள். ஆயினும் அது அவ்வளவாய்க் கொண்டாடத்தக்கதன்று; அதிலுள்ள காரியம் என்னவெனில், இயற்கையாயே தனக்குக் கடவுள்கொடுத்த சக்தியொன்றுதவிர தோல்வளையம் முதலிய கருவி யாதொன்றுமில்லாமல், ஒரு சாதாரணமான பல்லிமுதலிய பூச்சிகள் நமது கண்முன்னே அடிக்கடி செய்துகொண்டிருக்கிற செய்கையை அந்த வித்தைக்காரன் திருத்தமில்லாமல் அலங்கோலமாய் வெகு வருத்தப்பட்டு ஒருவாறு செய்துமுடித்தானென்பதுதான். அந்த விகாரமான ஆட்டத்தை அரைநாழிகை பார்ப்பதற்கு அநேகர் அதிக ஆவல்கொண்டு கைப்பொருள் செலவுசெய்து போவதென்ன? எப்போதும் தங்கள் கண்முன்னே பிரத்தியக்ஷமாய் நடக்கிற மிகவும் அற்புதமான காட்சியைக்கண்டு, கணப்பொழுது அதைப்பற்றி ஆலோசித்து ஆநந்தித்தலாகிய அதன் உரிமையைமட்டும் செலுத்தாமல் இருப்பதென்ன?

இதிருக்கட்டும்; அந்தப் பூச்சிகளுக்குக் கிடைத்திருக்கும் விசித்திரமான சக்தியை நாம் கற்றுக்கொள்ளக்கூடாதாயினும், நமக்

இல்லாத திறமை அவற்றினிடத்தில் எப்படி அமைந்திருக்கிறதோ அதைச் சற்றே கண்டறிந்துகொள்வோம். ஒரு பொருளை நாம் பார்ப்பதென்றால் நேராய்க் கண்ணாலே பார்ப்பதே நலம். ஏதாவது ஒரு பூச்சியைப் பிடித்து அதன் கால்களில் தலைகீழாய் நடக்கும்படியான திறமையென்ன இருக்கிறதென்று பார்க்கவேண்டும். எதைத்தொட்டாலும் அதில் ஒட்டிக்கொள்ளும்படியான ஒருவிதப் பசை அவற்றின் கால்களில் அமைந்திருந்தாலும் இருக்கலாம். ஆனால் அப்படி இருக்குமாயின், பூச்சிகள் போகிறவழியெல்லாம் காலடிகள் அமைந்திருக்கவேண்டுமே? அப்படிப்பட்டதொன்று மில்லாமையால் அவற்றின் கால்களில் எவ்விதமான பசையும் இல்லையெனவே சொல்லவேண்டியிருக்கிறது. ஆதலால் வேறென்ன உபாயம் இருக்கிறதோ பார்ப்போம்.

இவ்விஷயத்தைப்பற்றி முன்னமே பலர் பரிசோதித்தறிந்திருக்கிறார்கள். வேண்டுமானால் நாமும் இப்போது அதை நன்றாய்ப் பார்க்கலாம். பூச்சிகளின் கால்கள் நூலிழைபோல் மிகவும் மெல்லியவையாக வெகு நுட்பமாயிருப்பதால் அவற்றின் அமைப்பு இத்தன்மையதென்று நமது சிறுகண்களால் கண்டறியக்கூடாது. அதாவது வேறொரு துணைக்கருவியில்லாமல் நமது கண் அவற்றின் அமைப்பு இப்படிப்பட்டதென்பதைக் கண்டுகொள்ளமாட்டாது. தெய்வாதீனமாய்ச் சிறியவைகளை மிகப்பெரிய பொருள்களாகக் காட்டுகிற பூதக்கண்ணாடி அதற்கேற்ற கருவியாக நமக்கு அமைந்திருக்கிறதல்லவா? பூதக்கண்ணாடியின்மூலமாய்ப் பார்த்தால் பூச்சிகளின் கால்கள் மிகப்பெரியவையாகத் தோன்றுமாதலால் அவற்றிலுள்ள நுட்பங்களையெல்லாம் நாம் எளிதில் கண்டுகொள்ளலாம்.

சாதாரணமாய் நமது பார்வைக்கு மிகச் சிறியவையாகத் தோன்றுகிற பூச்சிகளின் கால்கள் பூதக்கண்ணாடியால் பார்த்தால் மிகவும் அற்புதமாய் எவ்வளவு பெரியவையாகத் தோன்றுகின்றன! அவற்றின் உள்ளங்கால்களை நுட்பமாய்ப் பார்ப்போமானால் அவ்விடமெல்லாம் ஒருவிதமான மயிர்கள் அடர்ந்திருக்கக் காண்போம். அம்மயிர்கள் சாதாரணமான மயிர்கள்போன்றவையல்ல; அவையெல்லாம் நுனியிலே பருத்திருக்கும். அவற்றின் தடித்த நுனியிலேதான் பூச்சிகளுக்குக் கண்ணாடி முதலான மழமழப்பான தரைகளிலும் மேல்மாடிகளிலும் சுலபமாய்ச் சஞ்சரிக்கும்படியான திறமை அமைந்திருக்கின்றது. அது எப்படியென்கிறீர்களோ? சொல்லுகிறேன் கேளுங்கள்:

கடலோரங்களிலாகட்டும் மற்றக் குளங்களின் நீரோரங்களிலாகட்டும் கற்களில் நத்தைப்பூச்சிகள் வெகு வலிவாய்க் கடித்துக்கொண்டிருக்க நாம் பலதடவை கண்டிருக்கிறோமல்லவா? நாம் எவ்விதமான பசைதடவி வேண்டுமென்று எவ்வளவு

வருத்தப்பட்டு ஒட்டினாலும், அதைப்போல அவ்வளவு கடினமாய் ஒட்ட நம்மால் முடியாது. எவ்வளவு வலிமையாகத்தான் அலைகள் அவற்றின்மேல் மோதட்டும்; அந்தப் பூச்சிகள் இருப்பிடம்விட்டு நகருவதில்லை. அந்த நத்தைப்பூச்சிகளை யாராவது அவ்விடத்தை விட்டு இழுத்துப்பார்த்ததுண்டா? நாம் எவ்வளவு வருத்தப்பட்டு இழுத்தாலும் நாம் கைந்நொந்து திரும்பவேண்டுமேயொழிய அதை அவ்விடத்தைவிட்டு ஒரு அங்குலங்கூட நகர்த்தமுடியாது. இப்படி எந்தச்சக்தி அந்தப் பூச்சிகளை அவ்வளவு உறுதியாய்க் கடித்துக் கொண்டிருக்கச்செய்கிறதோ, அதே சக்திதான் நமது வீட்டுச்சுவர் களில் ஊருகிற பூச்சிகளை அவற்றின் உள்ளங்கால் மயிர்களின் மூலமாய் அவ்வவ்விடங்களில் நன்றாய்ப் பற்றச்செய்கின்றது. நத்தைகளின் உடல் கல்லோடு அவ்வளவு உறுதியாய்ப் பிடித்துக் கொண்டிருப்பதற்கு எப்படி ஏற்றதாயிருக்கின்றதோ, அப்படியே இந்தப் பூச்சிகளின் மயிரும் நுனியிலே நன்றாய் அகன்று எவ்வளவு மழமழப்பானவிடத்திலும் உறுதியாய்க் கடித்துக்கொள்ள ஏற்றதாகின்றது.

இந்தவிஷயம் தெளிவாய்ப் புலப்படும்படியாகச் சுலபமான திருஷ்டாந்தமொன்று காட்டுகிறேன் பாருங்கள்: அரைரூபாய் அளவே அளவுள்ள மழமழப்பான தோல்துண்டு ஒன்றை எடுத்து, அதன் மத்தியில் சிறியதாய் துவாரமொன்றுசெய்து அதில் மெல்லிய கம்பி ஒன்றைக் கோத்து மறுபடி அது கழன்றுபோகாமலும் அதன்வழியாய்ச் சிறிதளவும் காற்று உள்ளே புகாமலும் அதன் நுனி அந்தத் தோலோடு நன்றாய்ப் பொருந்தும்படிச் சுத்தியால் உறுதியாகத் தட்டிவிடவேண்டும். அணுவளவு காற்று உள்ளே புகும் படியிருந்தாலும் அந்தக் கருவி நமது காரியத்துக்கு உதவாது.

இந்தச் சிறுகருவியை நாம் செம்மையாய்ச் செய்துமுடிப்போமானால், அதைக்கொண்டு அநேகம் ராத்தல் பளுவுள்ள கற்களைச் சுலபமாய்த் தூக்கலாம். ஆனால் அப்படி நாம் தூக்க ஆரம்பிப்பதற்குமுன்னே கம்பிநுனியில் கோத்திருக்குந்தோல் மிகவும் நயமாய் வணங்கும்படியாகச் சற்றுநேரம் அதைத் தண்ணீரில் ஊறவைக்கவேண்டும். அந்தத் தோல் நன்றாய் ஊறி மெதுவானதும், நாம் எடுக்கவேண்டுமென்று கருதிய கல்லின்மேல் அதை நன்றாய்ப் பொருத்திப் பின்பு அதன் கம்பியைப் பிடித்து மெதுவாய்த் தூக்குவோமானால், அந்தக் கம்பியைப் பிடித்தே அந்தக் கல்லைத் தூக்கித்தூக்கிப் பலவிடங்களில் வைக்கும்படி அவ்வளவு உறுதியாய்த் தோல் கல்லோடு கடித்துக்கொண்டிருக்கக் காண்போம். பின்பு அந்தத் தோலைக் கல்லினின்றும் கொஞ்சம் பலமாய் இழுத்தாலொழிய அதை வேறாய் எடுக்கக்கூடாது.

அந்தத் தோல் ஏன் அப்படிக் கல்லோடு கடித்துக்கொள்கிறதென்கிறீர்களோ? நாம் அதில் கோத்திருக்கிற கம்பியைப் பிடித்

துத் தூக்கும்போது அந்தத் தோலின் மையம்மாத்திரமே தூக்கப் படுகிறதாகையால், அந்தக் கல்லுக்கும் தோலுக்கும் இடையே கூடாரம்போலக் கொஞ்சம் வெளியுண்டாகின்றது. நன்ருய் மெதுவாக்கப்பட்ட அந்தத் தோல் கல்லோடு சுற்ருேரம் உறுதியாய்க் கடித்துக்கொண்டிருக்கிறதாகையால், அதன் வழியாய் அந்தச் சிறுகூடாரத்திற்குள் சிறிதளவும் காற்று நுழைந்துபோகமாட்டாது. வாயுவில்லாதவிடம்நோக்கி வாயு பலவந்தமாய்ச் செல்லுகிற தன்மையுடையதாதலாலும் அந்தச் சிறுகூடாரத்திற்குள் சிறிதளவும் காற்றில்லையாதலாலும், வெளிக்காற்று தன்னுடைய வலிமையெல்லாங்கொண்டு அதனுட் செல்லும்படி அந்தத் தோலை அழுத்துகின்றது; அதனுல் அது கல்லோடு அதிக உறுதியாய்க் கடித்துக்கொள்கின்றது. இப்படிக் கடித்துக்கொள்ளும்படியான திறமைக்கு வாயுவேகம் (atmospheric pressure) என்று பெயர். இப்படிப்பட்ட வாயுவேகந்தான் நத்தைப்பூச்சியைக் கல்லோடும் பல்லிமுதலிய பூச்சிகளின் கால்களைச் சுவர்முதலிய விடங்களோடும் நன்ருய் ஒட்டிக்கொள்ளும்படிச் செய்கின்றது. வீட்டுப்பூச்சிகளின் கால்மயிர்கள், இவ்விதமான வாயுபலத்தால் ஒட்டிக்கொள்வதற்கு ஏற்றவையாயும், அந்தந்த ஜந்துவின் தேகவலிமையைத்தாங்கத் திறமையுடையவையாயும் இருக்கின்றனவென்று இதனுல் நன்ருய் ஊகித்து அறிந்துகொள்ளலாம்.

அநேகமாய் உலகத்திலுள்ள பூச்சிகளுக்கெல்லாம் இவ்விதமாய் எந்தப்பொருளோடும் நன்ருய் ஒட்டிக்கொள்ளத்தக்க கருவியொன்று உண்டு. ஆனுல் அந்தந்த ஜந்துவின் பரிமாணத்துக்கு ஏற்றபடி அவை பலவிதமாயிருக்கும். பல்லிமுதலிய சில ஜந்துக்களுக்கு அவை வெகு வேகமாய் ஓடுவதற்கு ஏற்றவையாயிருக்கின்றன. சிலவற்றிற்கு மெதுவாய் அசைந்தசைந்து போம்படியிருக்கின்றன.

இந்தச் சிறியவிஷயத்தைக்கொண்டு நாம் இப்போது பூச்சிகளுக்குக்கடவுள் அளித்திருக்கும் அதிசயமான திறமையைக் கண்டுகொண்டதிருக்கட்டும். இதனுலேயே மிகவும் சிறந்தவிஷயமான வாயுவேகத்தின் அதிசயத்தை அறிந்துகொள்ளக்கூடுமல்லவா? அதன் ஆதாரத்தைக்கொண்டல்லவா எல்லாப் பூச்சிகளின் உருவமும் அமைந்திருக்கின்றது. இதனுல் இந்தப் பிரபஞ்சத்தில் எந்த விஷயமும் நாம் நிதானமாய் விசாரிக்கத்தக்கவையென்று தெளிவாய்த் தெரியவருகிறது. ஏனெனில், மேற்பார்வைக்குச் சிறிதும் பிரயோஜனமற்றவையாய்த் தோன்றுகிற பொருள்களைக்கூட நாம் சற்றே பொறுமையுடன் ஆய்ந்துபார்ப்போமானுல் எவ்வளவு அருமையான விஷயங்களெல்லாம் நமக்குத் தெரியவருகின்றன!

சுதேச சரித்திர விலாசம்.

நூர்ஜிஹான் என்னும் ராணியின் கதை.

ஏறக்குறைய மூன்னூறு வருஷங்களுக்குமுன் வடஇந்துஸ்தானத்தில் ஒரு பெருங்காட்டில் இரண்டுபேர் அல்லாடித் திரிந்து கொண்டிருந்தார்கள். அந்தக் காடுமுழுதும் வெட்டவெளியாய் எவ்வளவுதூரஞ்சென்றாலும் ஒரு பசும்புல்கூடக் காணக்கிடையாமல் எங்கும் எரிந்து பாழாய், வழிதப்பி யாராவது அங்கே அகப்பட்டுக்கொண்டால், அப்படிப்பட்டவர்கள் மறுபடி பிழைக்கிற ஆசையே இல்லாமல் அப்படியே மாண்டுபோம்படி அவ்வளவு கொடியதாயிருந்தது. அந்தப் பெரியமணல்வெளியிலே நடுப்பகலில் தெரியாமல் அகப்பட்டுக்கொண்டு, மேலே முகத்தைச் சூரியன் எரிக்கவும், கீழே காலை நன்றாய்ச் சிவக்கவறுத்த அரப்பொடிகள் போன்ற சிறுமணல்கள் கொளுத்தவும், உயிரை விடமாட்டாமல் குற்றுயிராய்க் குதித்துத் தத்தளிக்கின்ற வழிப்போக்கர்கள் சற்றே சுகமாய் உட்காரும்படி எவ்வளவுதூரஞ்சென்றாலும் நிழல் மரந்தான் ஒன்றுகூடக் கிடைக்காதென்றாலும், மேலுதடும் கீழுதடும் ஒன்றாய் ஒட்டிக்கொண்டு பிரிக்கப்போகாமல் நாவிரண்டு தாகத்தால் தவிக்கின்ற வாயைக் கழுவவாவது கையளவு தண்ணீர் எங்கேயாவது கிடைக்குமோ? கிடையாது. இவ்விதமான பெரும்பாலை நிலத்திலே அந்தப் பிரயாணிகள் இருவரும் ஒருநாள் எங்கேயோ திரிந்து தள்ளாடிப் பொழுதுபோனதும் ஓரிடத்தில் மடங்கினார்கள். இராப்பொழுதுசென்று காலையில் சிறிதளவும் மாசுமறுவில்லாமல் சூரியன் உதயமாகி அவ்வெளிமுழுதும் தட்டுத்தடையில்லாமல் ஒரேயளவாய்த் தன் கிரணங்களைச் சொரிந்தான். அக்காட்டுக்கு ஆகாயந்தவிர வேறொரு முடிவும் காணப்படவில்லை. ஒவ்வோரிடங்களில் அருமையாய் ஒவ்வொரு உலர்ந்து செத்துப்போன கட்டைமரந் தவிர மற்றொன்றும் தென்படாமல் எந்தத் திசையிலும் வழிதுறையொன்றுமில்லாத அந்தப் பெரும்பாலை நிலத்திலே அவர்கள் மறுபடியும் எழுந்துதிரிய ஆரம்பித்தார்கள்.

அந்தப் பிரயாணிகள் இருவரும் யாரெனில் ஒரு தார்த்தாரி தேசத்தானும் அவனுடைய மனையாட்டியும். அவ்விருவரும் தாமே வேண்டுமென்று விரும்பிச் செய்துகொண்ட கலியாணம் அவர்களுடைய சுற்றத்தாரொருவர்க்கும் சம்மதமில்லாமல் இருப்பது கண்டு, வேறெந்தத் தேசத்திற்காவதுபோய் நம் இஷ்டப்படி வாழலாமென்று ஆலோசித்துச் சுதேசத்தைவிட்டு ஓடிப்போனார்கள். அம்மனிதன் நல்ல சுந்தரமான வடிவமும், கம்பீரமான தன்மையும், மன்னுயிர்க்குரிய தைரியம், சுறுசுறுப்பு, விடாமுயற்சி, சாந்தம்,

பொறுமை முதலிய பலவித சாதாரண நற்குணங்களும் நற்செய்கைகளுமுடையவன். அவன் மனைவியோ, இளமை மென்மைமுதலிய வடிவழகு உடையவளாய்ப் பார்ப்போர் அனைவரும் பிரமிக்கும்படியிருந்ததுமன்றி, தன் கணவனுடைய துக்கத்தையும் தன்னுடைய வருத்தத்தையும் இன்னும் மலையளவாய்ப் பெருக்க, கர்ப்பத்திலே கருவொன்றையுந் தரித்திருந்தாள். அவர்கள் கையோடு கொண்டுவந்த சோற்றின் மிகுதி அன்றுகாலைக்குத்தான் போதும் போதாமலிருந்தது. ஒரு தோற்குடுவையில் கொண்டுவந்த தண்ணீரோ, அன்றுகாலையில் அவர்களுக்குக் கைகழுவக் கூடப் போதாதுதான். அந்தச் சோற்றையும் தண்ணீரையும் அவன் மூர்ச்சையடைந்தவள்போல விழுந்துகிடந்த தன் மனையாளுக்குக் கொடுத்து அவளுக்குக் கொஞ்சம் உயிர்ப்பு உண்டாக்கி அப்புறம் போகப் புறப்பட்டான். ஐயோ, அவர்களுக்கு என்ன கஷ்டகாலம் வந்துவிட்டது! அவ்விடத்திலே சற்றே தாமதித்து நிற்பார்களானால் அவர்களுக்குச் சீக்கிரத்திலேயே மரணமுண்டாவது நிச்சயம். இல்லாமல் எழுந்து எங்கேயாவது போனால் அப்போது எவ்விதமாகுமோ நிச்சயமில்லை. அவர்கள் மீள்வதற்கு எவ்விதத்திலும் வழியுண்டாவதாய்த் தோன்றவில்லை. சோறு தண்ணீர் ஒன்றுமில்லாமலே அவர்கள் வெகுநாள் யாத்திரைசெய்யவேண்டியதாயிருந்தது. வழிதுறை கேட்பதற்காவது யாராகிலும் அவ்வழி வருவார்களோ, கிடையாது.

அந்தப் பெண் வற்றி உலர்ந்து உடலொட்டிக்கிடந்த ஒரு சிறுகுதிரையின்மேல் ஏறிக்கொண்டாள். அந்தக் குதிரை வெகுநாளாய்க் கால்வயிற்றுக்குக்கூடத் தீனியில்லாமையால் மிகவும் பலவீனப்பட்டு அங்கேயே விழுந்து செத்துப்போவதுபோலிருந்தது; ஒரு அடிகூட எடுத்துவைக்கமாட்டவில்லை. இப்படியெல்லாமிருந்தும் தனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்து இப்படிப்பட்டதென்று அந்தப் பெண்ணுக்குத் தெரியாது. ஒரே ஒரு சிறிய அப்பந்தவிர மற்றத் தங்கள் கையிலிருந்த சாப்பாடனைத்தும் செலவழிந்துபோயிற்றென்பதும் அவளுக்குத் தெரியாது. அதுவும் அவன் தன் அருமைப்பெண்டாட்டி ஒன்றுமில்லாமல் தவிக்கப்போகிறாளே யென்று அவளுக்காகத் தன் வயிற்றுக்குத்தின்னாமல் காப்பாற்றி வைத்தது. பூர்ணகர்ப்பிணியாய்ச் சுபாவத்திலேயே மிக்க வருத்தப் பட்டுக்கொண்டிருக்கிற இந்தப் பேதைப்பெண், தமது கையில் ஒருபொருளுமில்லாமல் தமக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தையுங்கேட்டால், ஒருவேளை திடீரென்று மனங்குழம்பி வீழ்ந்து மூர்ச்சைபோவாளோவென்று திகிற்பட்டு அவன் அந்தச் சங்கடம் ஒன்றையும் அவளுக்குத் தெரிவிக்கவில்லை. இவ்வளவு ஆபத்தான நிலையிலிருக்கையிலும், இன்னும் ஒருவேளை மீட்சியுண்டானாலும் உண்டாகலாமென்றும் அணுவளவு ஆசைகொண்டு, செழிப்பான

ஒருநாட்டில் நடத்துவதுபோலவே இந்தக் கொடும்பாலைநிலத்திலும் நடத்திக்கொண்டுபோகிற கடவுள் நம்மை நடுக்காட்டிலே கைவிடுவாராவென்று கடவுளுடைய கிருபையையே முக்கியமாக நம்பிக் குதிரையை நடத்திக்கொண்டுபோனான். வெயில் ஏற ஏற அதின் கொடுமை மிகவும் அதிகமாகிக் கொளுத்தத் தலைப்பட்டது. கணப்பொழுதேனும் தங்குவதற்குத்தான் நிழலென்கிற பெயரே கிடையாதே. அப்போது அந்த மனிதன், வெயில் பொறுக்க மாட்டாமல் தன் பெண்சாதி படுகிற வருத்தத்தைப்பார்த்து மனமுருகி, தன் கையிலிருந்த குடையொன்றை மலர்த்தி அவள் முகத்திற்கு நேராய் மறைத்துக்கொண்டு அந்தப் பேதைக்குதிரையின் பக்கத்திலேயே நடந்துபோனான். சிறிதுநேரத்தில் அந்தக் குடையைக்கூடத் தாங்கமாட்டாமல் அவன் கையில் அதிக நோவெடுத்தது. சாதாரணமான மனிதர்களுக்கே ஒருபொருளை உயரத்தூக்கிப் பிடிப்பதென்றால் வருத்தமுண்டாகும்; இப்படிப் பட்ட கஷ்டதசையிலிருப்பவனுக்குக் கேட்கவேண்டுவதென்ன? ஆயினும் தன் உயிரினும் அருமையாய்ப் பக்கத்திலிருக்கின்ற பொருளினிடத்தில் ஆசைப்பெருக்கு அளவுகடந்திருக்கவே, அவன் தன் வருத்தமொன்றையும் பாராமல் குடைபிடித்து அவளுக்கு நிழல்காத்துக்கொண்டேபோனான். போகப்போக அவர்களுக்கு வழியும் மாளவில்லை, பொழுதும் போகவில்லை. அவன் கையில் அருமையாய் மிகுத்திவைத்துக்கொண்டிருந்த சிறு அப்பமும் பொழுதுபோக வெகுநாழிகைக்கு முன்னமே புசித்தாய் விட்டது.

இப்படியிருக்கச் சிறிதுநேரத்தில் சூரியனும் மறைந்துபோனான். இரவில் தங்க யாதொரு மறைவிடமும் காணப்படவில்லை. அதனால் அம்மனிதன் வேறுவிதியில்லாமல், கையிலிருந்த குடைக்காம்பைக் கீழேநட்டு அதன்மேல் ஒரு மெல்லிய துணியைப்போர்த்து ஒரு சிறு கூடாரம்போல் ஏற்படுத்தி, வெட்டவெளியிலே நன்றாய்த் திறந்தபடி அவ்விடத்துக் கொடியவிஷக்காற்றில் விழுந்துகிடப்பதைவிட இது கொஞ்சம் ஆதரவாயிராதாவென்று அதிலே தன் பெண்சாதியைப் படுக்கச்செய்தான். அந்தப் பெண் மெய்வருத்தத்தாலும் மனவருத்தத்தாலும் மிகவும் உடல்நொந்திருக்கவே, மரணதாகமென்று சொல்லும்படிப் பெருந்தாகமெடுத்து தேகம் மிகவும் வேக்காடுகொண்டு அவளுக்குச் சீக்கிரத்திலே பெருங்காய்ச்சல் உண்டாவதுபோலிருந்தது. அப்போது அவள்கணவனுக்கு உண்டான மனவருத்தத்தை என்னென்று சொல்லலாம்! இது வாசத்திற்கு ஏற்ற இடமல்லவென்று காட்டுமிருகங்கள்கூட விட்டோடிப்போன அந்தப் பெரும்பாலைநிலத்திலே, வயிறும் பிள்ளையுமாய்ச் சோறு தண்ணீர் ஒன்றுமில்லாமல் எழுந்திருக்கமாட்டாது, தன் பெண்சாதியோரண்டை தத்தளித்துநிற்க, அத்துடன் தான் வழிநடந்துவந்த

வருத்தமும், இரண்டொருநாளாய்ச் சிறிதளவும் தண்ணீர் குடியாமலிருந்த இளைப்பும் ஒன்றுசேர, அவன் மனம் எவ்வாறு தவித்ததோ! அந்தக் கஷ்டம் எவ்விதத்திலாவது நீங்குமோவென்று சிந்திக்கக்கூட அந்தக் காட்டில் யாதொரு வழியுமில்லை. அதுகண்டு அவன் இனி நாம் இப்படியே விழுந்து இறந்துபோகவேண்டுவதுதான் கதிஎன்று நினைத்தான். ஐயோ! அந்தப் பேதைப் பெண்ணினுடைய நோய் மேன்மேலும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆயினும் அவள் ஒன்றும்பேசாமல் மிகப் பொறுமையாய் அதைச் சகித்துக்கொண்டிருந்தாள். பிரசவவேதனை அவளுக்கு அதிகமாக ஆக, வெகுநாழிகையாய்க் கண்டிருந்த நாவறட்சியும் அதனுடன் மிகவும் அதிகமாகத் தலைப்பட்டது. அவள் தாகத்தோடு தவிக்கிற தவிப்பைப்பார்த்துப் பொறுக்கமாட்டாமல், எது எப்படிப்போனாலும் போகட்டுமென்று மிகத் துணிவுகொண்டு அம்மனிதன், தன்னிடத்திலிருந்த குத்துவாளைக் கையிலெடுத்துக்கொண்டு தன் குதிரையண்டைபோய், எவ்விதத்திலாவது தன் அருமைப்பெண்சாதி பிழைத்தாற் போதுமென்கிற பேராவலால் உடம்புதெரியாமல், அந்தக் குத்துவாளைக் குதிரையின் தொண்டையில் குத்தி அங்கிருந்து வழிந்துபெருகின ரத்தத்தை ஒரு குடுவையில் ஏந்திக்கொண்டு தன் சிறுகூடாரத்திற்குச் சென்றான்.

இப்படி அவன் சிறிதுநேரம் வெளியேபோயிருந்த தருணத்தில் அவன் மனையாள் பிள்ளைபெற்றாள். குதிரை ரத்தத்தை எடுத்துக்கொண்டு அவன் திரும்பிவருகையில் குழந்தையின் அழுகைக் குரல்கேட்டு, தனக்குப் பிள்ளை பிறந்ததென்கிற சந்தோஷமும், சிறிதளவேனும் ஆதாரவில்லாத இந்தப் பெரும்பாலைநிலத்திலே பிறந்ததே! சோறுதண்ணீரில்லாமல் தவிக்கிற தாயையும் குழந்தையையும் எப்படிக் காப்பாற்றுகிறதென்கிற பெருந்திகிலுமடைந்து மனந்தத்தளித்துக்கொண்டே பிள்ளைபெற்ற வருத்தத்தால் இட்டகால் இட்டகைகளாய் விழுந்துகிடக்கும் மனையாட்டியண்டைபோய்த் தன் கையிலிருந்த ரத்தக்குடுவையை அவள் வாயில் கொடுக்க, அவள் அதில் கொஞ்சம் குடித்துச் சிறிதளவு மூர்ச்சைதெளிந்தாள். உடனே அவன் செத்து விழுந்துகிடந்த தன் குதிரையின் இறைச்சியை எடுத்து ஒருவாறு சமைத்துத் தன் பெண்சாதிக்கும் கொஞ்சம் கொடுத்துத் தானும் தின்றான். அதனால் அப்போதிருந்த அவர்களுடைய பெரும்பசியும் தாகமும் ஒருவாறு தணிந்தன.

மறுநாள் பொழுதுவிடிந்ததும், அவர்கள் அப்புறம்போக அவ்விடம் விட்டெழுந்தார்கள். அப்போது தன் மனையாளுடைய சரீரஸ்திதியைக்கண்டு அம்மனிதன் மனங்கலங்கிநின்றான். தரையில் செம்மையாய்க் கால்பாவி நிற்கக்கூட அவளுக்குச் சக்தி

யில்லே. அப்படியிருக்க அவள் அந்தக் குழந்தையையும் கையி லெடுத்துக்கொண்டு எப்படி நடந்துபோவாள்? இத்தனைநாளாய் அவர்களுடைய மூட்டைகளையெல்லாம் சுமந்துகொண்டுவந்த குதிரை கொல்லப்பட்டுப்போனபடியால், அந்த மூட்டைகளை யெல்லாம் அவனே சுமந்துகொண்டு போம்படியாயிற்று. இப்ப டிப் பலவித சங்கடங்களோடு அவர்கள் அவ்விடத்தைவிட்டுப் புறப்பட எழுந்திருக்கையில் இரண்டுமயில் தூரத்திற்குள்ளே நிரம் பநீருள்ள ஒரு தடாகமும் அதைச் சுற்றி எப்படிப்பட்ட தாபத்தை யும் நொடிப்பொழுதிலே நீக்கவல்ல பலவகை நிழல்மரங்களும் பூந் தோட்டங்களுமாய் அழகிய தோப்பொன்று காணப்பட்டது. அந் தத் தோப்பைச்சுற்றி அநேகம் ஆடுமாடுகள் உல்லாசமாய் ஓடித் திரிந்து மேய்ந்துகொண்டிருக்கக் காணப்பட்டன. அதற்குச் சமீ பத்திலே மிகப் பெரிதாய்ப் பட்டணமொன்றும் காணப்பட்டது. அப்பட்டணத்துப் பிரஜைகள் அநேகர் வெளிப்புலங்களுக்குவந்து வேலைசெய்வதும் அநேகர் புலங்களிலிருந்து பட்டணத்திற்குப் போவதுமாயிருக்கக் காணப்பட்டார்கள். அவ்விடமெங்கும் வெயி லின் கொடுமை சிறிதும் தெரியாமல் மிகக் குளிர்ச்சிபொருந்தி நெடுந்தூரம் வழிநடந்து பெருங்கானலில் அடிபட்டு மிகவும் வே ர்த்து விடாய்த்து வந்துவிழும் வழிப்போக்கர்களுடைய ஆயாசத் தையெல்லாம் உடனே ஆற்றிவிப்பவைபோலத் தோன்றின.

அது ஒரு பொய்க்காட்சியானாலும் அதைக் காணும்போதே அவர்கள் தங்கள் நோயெல்லாம் அந்தக்ஷணமே தீர்ந்துபோன தாக நினைத்துப் பேரானந்தமடைந்தார்கள். தங்கநிழலும் தாகத்திற் குத் தண்ணீரும் கிடைக்கப்போகிறதென்கிற சந்தோஷத்தால், மெய்வருத்தங்கூடத் தோன்ருமல், அப்போதுதான் பிள்ளைபெற்று உடம்பு நொந்துகிடந்த பேதைப்பெண்கூடத் தன் கணவன் கை யைப் பிடித்துக்கொண்டு தைரியமாய் எழுந்து அதை நோக்கிச் சென்ருள்.

அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கொஞ்சநேரம் நடந்தபின்பு பார்க்கையில், அப்போதும் அந்தத் தடாகமும் பட்டணமும் அப் படியே தென்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால் சிறிதும் சமீபத்தில் வராமல் முதல்முதல் பார்த்தபோது எவ்வளவுதூரம் இருந்த தோ அவ்வளவு தூரத்திலேயே தெரிந்துகொண்டிருந்தன. அவர் கள் தங்கள் கை கால்களைமட்டும் அசைப்பதாய்த் தோன்றிற்றே யொழிய ஒரு அடியாவது எடுத்துவைத்து நடந்துபோவதாய்த் தோன்றவில்லை; அப்படியிருந்தும், அந்தத் தடாகத்தண்டை போய்ச் சேருவோமென்கிற ஆசைமட்டும் அடங்காமல் வருந்தி அப்புறமும் சென்ருர்கள். அப்படிப் போகப்போக அந்தத் தடாக மும் தோப்பும் திடீரென்று மறைந்துபோயிற்று. பட்டணமும் வெகு

தூரத்தில் பனியால் மூடப்பட்டிருப்பதுபோலக் காணப்பட்டுக் கொஞ்சங் கொஞ்சமாய்க் கண்ணுக்குத் தெரியாமற்போய்விட்டது. பின்பு அந்தப் பெருங்காடுமுழுதும் எப்போதும்போல ஒரேவெளி யாய்க் காணப்பட்டதேயொழிய வேறொன்றுமில்லை. அதுவரை யில் தோன்றித் தன் மனதைத் தேற்றிக்கொண்டிருந்த மாயக்காட்சி திடீரென்று மறைந்துபோகவே, மெய்வருத்தமும் மனவருத்தமும் முன்னிலும் பதின்மடங்கு அதிகமாகி உடனே அந்தப் பெண் சோர்ந்து தரையில் விழுந்தாள். அதுகண்டு அந்தத் துர்ப்பாக் கிய மனிதன் இனி இவர்களைக் காப்பாற்ற யாதொரு வழியு மில்லையென்று நிராசைகொண்டு, தன் அருமைமனையாட்டி மா ண்டுபோகப்போகிறாளேயென்று திகிலடைந்தான். தன் குழந் தையைக் கையிலெடுக்கக்கூட அவளுக்குத் திராணியில்லை. அப் படியிருக்க அதை எடுத்துக்கொண்டு அவள் எப்படி வழிநட ந்துபோவாள்! அங்கேயேநின்றால் இரண்டொருநிமிஷத்தில் அனை வருக்கும் மரணம் நிச்சயமே. அதனால் அந்தக் குழந்தை போனா லும்போகிறது; எப்படியாவது பெண்சாதி பிழைத்தாற் போதுமெ ன்று ஒரு பேயெண்ணமுடையவனாய் அம்மனிதன், அந்தப் பச் சைப்பாலகனை அங்கேயே போட்டுவிட்டு அவளைமட்டும் மெல்ல வழிநடத்தி அழைத்துக்கொண்டுபோகிறதென்று தீர்மானித்து, அந்தக் கருத்தை மனையாட்டியுடன் சொல்ல, அவளும் வேறு விதியில்லாமல் அவனுடைய ஆலோசனைக்கு இசைந்தாள். அவர் கள் அந்தக் கொடுஞ்செயல் செய்யத்துணிந்தது அநியாயமென்ப தற்கு அறிகுறிப்பாய் அவர்களுடைய மனம் சிறிதுநேரம் திட்டுத் திட்டென்று அதிகவேகமாய் அடித்து அதுவும் அடங்கிப்போ யிற்று.

அருமையாய்ப் பிறந்த அந்தக் குழந்தையை அக்காட்டிலேயே போட்டுவிட்டுப் போகிறதென்று தாய்கூடத் துணிந்து அதைக் கடைசியாய் ஒரு முத்தமிட்டுக் கண்ணுங்கண்ணீருமாய்க் கணவன் கையில் கொடுத்துவிட்டாள். அவன் அதை வாங்கி அருகாமையி லிருந்த ஒரு கட்டைமரத்தின் சிறுநிழலில் கீழே மணல்சுடாமலும் மேலே வெயிலெரிக்காமலும், கொஞ்சம் காட்டுத்தழையை உருவிப் போட்டு அதன்மேல் அக்குழந்தையை விட்டு மேலே இரண்டு தழையால் மூடி, நடுக்காட்டிலே திக்கற்றுப்பிறக்கும் பேதைக ளையும் அகண்டபூமண்டலாதிபதியான மகாராஜாவையும் ஓரள வாய்க் காக்கின்ற கடவுளே கருணைகூர்ந்து இக்குழந்தையைக் காத்துக்கொள்ளவேண்டுமென்று விட்டுத் தன் மனையாளண்டை போய்ச் சேர்ந்தான். எழுந்து ஓரடிவைக்க அவளுக்குச் சத்தி யில்லை; அவளுக்குச் சுமையென்றெண்ணிக் குழந்தையைப் போட்டுவிட்டதொன்றுமாத்திரம் மிகுந்ததேயொழிய மற்றொரு பயனுமில்லை. இயற்கையாய்ச் சரீரத்தில் வலிமையிருந்தாலல்ல

வா அவள் எழுந்து நடக்கப்போகிறுள்! நாவறட்சியோ இன்னும் அப்படியே மேன்மேலும் வருத்திக்கொண்டிருக்கின்றது. இப்படியெல்லாமிருந்தும் இன்னும் சிறிதுதூரம்போனுல் ஏதாவது கொஞ்சம் தேறுதல் கிடைக்குமோவென்கிற வீணுசைமட்டும் அடங்கவில்லை; அதனுல் அவள் கணவன்தோளை ஊன்றுகோலாகக்கொண்டு வெகு வருத்தத்துடன் எழுந்து சிறிதுதூரம் நடந்துபோனுள்.

பத்துமாதகாலம் வருந்திச் சுமந்துபெற்ற பாலகனை உயிரோடு எறிந்துவிடுவதென்ருல், பெற்றவளுடைய மனந்தாளுமா! அவ்விளங்குழந்தையை எறிந்துவிட்டவுடனே அந்தப்பெண், ஓரடி எடுத்துவைக்கக்கூடாமல் உடம்பில் ஆயாசம் ஓரண்டையிருக்க, புத்திரசோகத்தால் மனம் மிகவும் வெதும்பிச் சித்தப்பிரமை பிடித்தவள்போலக் கண்ணுந்தெரியாமல் காதுங்கேளாமல் கோவென்று கதறலானுள். தாம் பெற்றகுழந்தையைத் தாமே கொல்லத்துணிந்ததை நினைக்கநினைக்க அவள் துக்கம் சிறிதும் தணியவேயில்லை; மூர்ச்சைபோய்க் கீழே விழ்ந்தாள். அப்போது சரியாய் நடுப்பகல்; கீழும் மேலும் வெந்துபோகின்றது. அப்படிப்பட்ட விடத்திலே அவள் புத்திரசோகத்தால் விழுந்து அழுவதுகண்டு அந்த வருத்தத்தைப் பார்க்கமாட்டாமல், திரும்பிப்போய் அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டுவந்து அவள் கையிற் கொடுத்துவிடுகிறதென்று நிச்சயித்து அவளுடைய கணவன், முன்போலவே தன் குடையைக் கீழேநட்டு அதன்மேல் ஒரு துணியைப்போட்டு அவள்மேல் வெயில்படாமல் ஒருவாறு நிழலுண்டாக்கிவிட்டுத் தன் குழந்தையை எறிந்தவிடத்திற்கு ஓடினுன். அங்கே போய்ச் சிறிதுதூரத்திலிருந்தே அக்குழந்தையின் நிலையைக்கண்டு மனநடுங்கி அப்படியே மரம்போலநின்ருன். அவன் அக்குழந்தையின்மேலே மூடிவைத்த தழைகள் விலகிப் பெரிய கருநாகமொன்று அதைச் சூழ்ந்துகொண்டு தன் படத்தால் அதற்கு நிழல்காத்துக்கொண்டிருந்தது. அம்மனிதன் ஓடிவந்த சத்தங் கேட்கவே அந்தப் பாம்பு மெல்ல அவ்விடம் விட்டு நழுவி அண்டையிலிருந்த கட்டைமரத்தின் பொந்திலே புகுந்துகொண்டது. அப்பாம்பு அந்தக் குழந்தையை நெடுநேரம் சூழ்ந்துகொண்டிருந்ததென்ருலும் அதற்குச் சிறிதும் கொடுமைமட்டும் செய்யவில்லை. அந்தக் குழந்தை உயிரோடு நன்ருய் அழுதுகொண்டிருக்கக்கண்டு மிகுந்த சந்தோஷத்துடன் அவன் அதை எடுத்துக்கொண்டு தன் மனையாட்டிகையிற் கொண்டுவந்து கொடுக்க, தேகஸ்மரணையில்லாமல் உயிர்க்கு மன்ருடிக்கொண்டிருந்த அப்பெண், குழந்தையென்கிற சத்தம் கேட்கவே வருத்தத்தோடு வருத்தமாய்க் கொஞ்சம் கண்திறந்துபார்த்துக் குழந்தையைக் கையில் வாங்கிக்கொண்டு முத்தமிடப்போனுள்; அதற்குக்கூட அவளுக்குச் சக்தியில்லை. மறுபடியும் உடனே மயக்கம் வந்துவிட்டது.

சிறிதுநேரத்தில் மறுபடியும் அம்மயக்கந் தெளிந்ததென்றாலும் அது போக்குத் தெளிவேயொழிய வேறன்று.

அவள் படுகிற வேதனையையெல்லாம் அவன் கண்ணுங்கண்ணீருமாய்ப் பார்த்துக்கொண்டே நின்றான். அப்போது அவள் அவனைப்பார்த்து, என் அருமைக்கணவனே, காக்கை கழுகுமுதலியவை வந்து பிடுங்கும்படி என் உடலை இப்படியே எறிந்துவிட்டுப் போகாதே; ஒரு குழிவெட்டிப் புதைத்துவிடு; நம்முடைய நேசம் இன்றோடு போய்விடவில்லை; நாம் இருவரும் மறுபடியுங் கூடுமிடம் வேறொன்று உண்டு. இன்னும் சிலகாலத்தில் அங்கே ஒன்றாய்க்கூடி நாம் சுகமே வாழ்வோமென்று நா தழதழத்துச் சொன்னாள்.

அவன், அதற்கு ஒன்றும் பதில்உரைக்க நாவெழாமல், கண்ணீர் மாலைமாலையாய்ப் பெருக அவள் மார்மேல் விழுந்து புலம்பினான். அவளுக்குப் பேச்சு அடங்கிப்போயிற்று. புரட்டலும் அடங்கிற்று. அவன் கடைசியாய் முத்தமிட அவள் முகத்தைத் தூக்கினான். முகத்தின் ஒளியும் மழுங்கிப்போயிற்று. கண்களும் இருண்டுபோயின. உதடு ஆடுவதும் நின்றது. மூச்சும் அடங்கிற்று. ஐயோ! அந்தக்ஷணமே அவள் இறந்துபோனாள்.

முதனாள்தான் பிறந்த பாலகனையுந் தன்னையும் நடுக்காட்டிலே அல்லாடவிட்டுத் தன் மனையாள் இறந்துபோனதைக்கண்டு அவன் ஒன்றுந்தோன்றாமல் திகில்பிடித்து ஆகாயத்தை அண்ணாந்துபார்த்து, தனக்கு அப்படிப்பட்ட விதிப்பயனை விளைவித்த கடவுளைப் பலவாறு வெறுத்துக்கொண்டு, அந்தப் பிணத்தின்மேல் விழுந்து கொஞ்சநேரம் கோவென்று கதறினான். சிறிதுநேரங் கழித்து மனதைக் கொஞ்சந் திடப்படுத்திக்கொண்டு, தன் மனையாள் மரணகாலத்தில் தன்னை வேண்டிக்கொண்டதை நினைத்து, அண்டையில் கல்லறையொன்று ஏற்படுத்தி அதில் அந்தப் பிணத்தையெடுத்து விட்டான். தன்னை ஆயுளளவும் அருமையாய் வளர்த்தெடுக்கத்தக்க தாயைப் பறிகொடுத்தது தெரியாமல் அவள் குழந்தை அண்டையில் விழுந்துகிடந்தது. ஐயோ! தாயிறந்தது தெரியாவிடினும் இப்பூமியிற் பிறக்கும்போது உடனே உண்டான பசி தெரியாமற்போகாதே! பசி பொறுக்கமாட்டாமல் அக்குழந்தை வீரிட்டது. அவன் எதைக்கொடுத்து அதன் பசியைத் தணிப்பான்? அவன் கையில் ஒன்றுமில்லையே! கடைசியாய் அவன் அக்குழந்தையின் அழுகையைக் கேட்டு மனந்தாளமாட்டாமல், தன் தேகத்தின் வேர்வையால் முற்றும் நனைந்துகிடந்த ஒரு கம்பளத்தையெடுத்து அதன் வாயில்வைத்தான். அந்த வேர்வை நீரை உறிந்துகொண்டு அது கொஞ்சநேரம் கூவாமலிருந்தது. அந்த மனிதனோ, பசியின் கொடுமையாலும், நெடுநேரம் புலம்

பின இளைப்பினுலும், வெயிலின் வெப்பத்தாலும், மெய்சோர்ந்து நாவறண்டு உதடு உலர்ந்து வாயைக்கூடத் திறக்கப்போகாமல் தவித்தான்.

இப்படியிருக்கப் பகற்பொழுதும் கழியலாயிற்று. அந்தக் கொடிய ராத்திரியை அவன் அந்தப் பயங்கரமான காட்டிலே எப்படிக் கழிக்கமாட்டுவான்! அந்த ஓரிரவுமட்டும் அவனுக்கு ஒரு யுகமாயிருந்தது. சிறிதுநேரம் பிரஞ்ஞையற்றுப் பிணத்தோடு பிணமாய்க்கிடப்பதும், சிறிதுநேரம் புலம்புவதும், சிறிதுநேரம் தன் விதியை வெறுப்பதும் இப்படியாக அந்த இராப்பொழுதைக் கழித்தான். பொழுதுவிடிகிறதருணத்தில் அவனுக்குச் சிறிதும் தேகஸ்மரணையேயில்லை. மூர்ச்சைபோய்ப் பிணத்தோடு பிணமாய்க்கிடந்தான். அத்தருணத்தில் ஏதோ ஒரு அதிர்ச்சியுண்டாகித் திடீரென்று கண்ணை விழித்துப்பார்த்தான். பார்த்தபொழுது பற்றியெரிகிறகாட்டிற் பெருமழை பொழிந்ததுபோலாயிற்று. யாரோ சில வழிப்போக்கர்கள்வந்து தன்னைச் சூழ்ந்துகொண்டிருக்கக்கண்டான். அவர்கள் ஒருநாள் முன்னதாய் வந்திருப்பார்களானல் அந்தப் பெண்ணை இப்படி நடுக்காட்டிற் பறிகொடுக்கும்படி நேருமா! விதியை யார் வெல்லக்கூடும்! அவர்களெல்லோரும் லாகோர்பட்டணத்துக்குப் போகிறவர்கள். அவர்கள் அம்மனிதன் படுகிற பரிதாபத்தைப்பார்த்து மிகவும் மனநொந்து அவனுக்குக் கொஞ்சம் உணவுகொடுத்துக் குழந்தைக்கும் கொஞ்சம் ஆட்டுப்பால் புகட்டினர்கள். அவர்கள் கொடுத்த போசனத்தைப் புசித்தபிறகு சரீரத்தில் சிறிது வலிமைவரவே, அவன் கண்களில் நீர் தளும்பத்தளும்பத் தன் அருமை மனையாட்டியை அவ்விடத்திலேயே புதைத்துவிட்டுக் குழந்தையைக் கையிலெடுத்துக்கொண்டு அவர்களோடுகூடச்சேர்ந்து மெல்ல மெல்ல அவர்கள் போகிறவிடத்திற்கே போவதாய்ப் புறப்பட்டான்.

தார்த்தாரி தேசத்தானன அம்மனிதன் அந்தப் பிரயாணிகளோடு சிலநாளில் லாகோர்பட்டணம் போய்ச்சேர்ந்தான். அப்பட்டணத்தில் அவனுடைய புத்தியும் சாமர்த்தியமும் வெகு சீக்கிரத்தில் நன்ருய் வெளிப்பட்டன. அவன் சாதாரணமான மனிதனன்று. மனிதர்களுடைய தராதரங்களை எளிதில் அறிந்துகொள்ளும் நுட்பபுத்தியுள்ள ஆக்பர் சக்கரவர்த்திகூட வேண்டிவிரும்பத்தக்க தன்மையுடையவனுய், அவனல் மிகவும் நேசிக்கப்பட்டு அதுமுதல் மேன்மேலும் பெருமைபெற்றுவந்தான். அம்மனிதனுடைய யோக்கியதை இவ்வளவென்பதை ஆக்பர் நன்ருய்த் தெரிந்துகொண்டு, அவனுடைய சாமர்த்தியமெல்லாம் தன் ராஜ்யத்தின் க்ஷேமத்தின்பொருட்டு உபயோகமாகும்படிச் செய்தான். அந்த மனிதனும் வெகுசீக்கிரத்திலே படிப்படியாய் உயர்ந்த

பதவிக்குவந்து கடைசியில் அந்த ராஜாங்கத்தில் ஒரு பெருத்த தனபாலகனுனன். தேசசரித்திரங்களுள் மிகவும் பெருமையாய்ப் புகழப்பட்டிருக்கும் சக்கரவர்த்திகளுள் ஒருவனுக்கு ராஜகாரி யங்களை நடத்த வலதுகைபோலிருந்தவனென்று அவ்வளவு சிறப் புற்று அனைவராலும் மிகவும் கவுரவப்படுத்தப்பட்டவனுக வாழ்ந் தவனிவன்; ஆக்பர் சக்கரவர்த்தியும் அவனிடத்தில் பரிபூர்ண நம் பிக்கைவைத்து ஆயுளளவும் அவனைப் பெருமையாகவே நடத்தி னுன்.

அவனுடைய மகளோ, பிறந்தநாள்முதல் கடவுளுடைய கரு ணையாலேயே காப்பாற்றப்பட்டு, நாளொருமேனியும் பொழு தொருவண்ணமுமாய் வளர்ந்து வெகுசீக்கிரத்திலேயே நல்ல பரு வம்வந்து அனைவரும்பார்த்து மயங்கத்தக்க வடிவழகுள்ளவளாய், ஸ்திரீரத்தினமென்று பிரசித்திபெற்றிருந்தாள். பெண்களுக்கு வேண்டிய நன்னெறிபயக்கும் பலவகைக் கல்விகளும், நற்குண நற்செய்கைகளும் அவளுக்கு வெகு கருத்தாய்க் கற்பிக்கப்பட்டன. சீக்கிரமே அந்தப் பெண் எல்லாவிஷயங்களிலுந் தேர்ந்தவளாய் உலகுக்கு ஒப்பு உயர்வு ஒன்றுமில்லாத ஒரு ஆபரணமாயிருந்தாள். அவளுக்கு இருந்த புத்தி விவேகம் முதலியவை உயர்ந்த புரு ஷர்களுக்குக்கூட இவ்வளவு இல்லையென்று சொல்லும்படியாயிரு ந்தன. அவளுடைய அழகையும் சாமர்த்தியத்தையுங்கண்டு அநே கர் அவளைக் கலியாணஞ்செய்துகொள்ள முயன்றுர்கள்; ஆயினும் அப்படிப்பட்ட பெண்மணி மனையாளாக வாய்க்கும்படியான பாக் கியம் ஒருவரும் பெறவில்லை. கடைசியில் அவள் ஷியர்ஆப்கன் என்னும் தார்த்தாரியனுெருவனுக்கு மணமாலைசூட்டினுள். அந்த ஷியர்ஆப்கன் சிறந்த கன்வான் என்றும், நல்லோர்களிடத்தில் ஒருபோதும் நேசம் மாருதவனுன ஆக்பர்சக்கரவர்த்தியும் அந்த மனிதனை மிகவும் கவுரவமாக நடத்தினுனென்றும் சரித்திரக் காரர்கள் புகழ்ந்துபேசுகிறுர்கள். அவன் மனதில் மிகவும் அரு மையான குணங்களெல்லாம் அமைந்ததுபோலவே மேல்தோற்ற த்திலும் கம்பீரமான வடிவமும் பளபளப்பான மேனியும் இன்னும் பல உயர்ந்த லக்ஷணங்களும் வெகுநன்றுய் அமைந்திருந்தன. இப் படிப்பட்ட உயர்ந்தபுருஷனுக்கு அந்த ஸ்திரீ ரத்தினத்தை மனையா ட்டியாகும்படிக் கடவுள் ஏற்படுத்தியது எவ்வளவு பெருமையாயி ருக்கிறதென்றுசொல்லி யாவரும் அதை மிகவும் மேன்மையாகக் கொண்டாடினுர்கள்.

(இன்னும் வரும்.)

பயிர்வளர்ச்சியின் விசித்திரம்.

தாது, மூலம், ஜீவன் என்று சிருஷ்டிப்பொருள் மூன்றுவர்க்கங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ஒவ்வொன்றிலும் அளவிடக்கூடாத விசித்திரங்களுண்டு. அவற்றையெல்லாம் எடுத்துரைப்பிற் பெருகும். ஆயினும், மூலவர்க்கத்திற்கு இயற்கையாயுள்ள அத்தியற்புதமான சிலவற்றைமட்டும் இங்கே ஒருவாறு சொல்லுகிறோம். மூலவர்க்கத்தால் இப்பூமண்டலம் போர்த்தப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். ஆவரணமின்றி அடிக்கிறகாற்றிலும் எரிக்கிற வெயிலிலும் கிடந்து தேய்ந்துபோன கூழாம்பாறைகளில் படர்ந்திருக்கிற பாசிமுதல், மலைகளின்மேல் சாகோபசாகமாய் ஆகாயத்தை முட்டப் படர்ந்தோங்கி வளர்ந்திருக்கிற தேவதாரு ஈறாகவுள்ள மூலவர்க்கத்தில் ஒவ்வொன்றிலும் எத்தனையோ ஆச்சரியமுண்டு. ஆயினும், அவற்றைக் கண்ணுற்றுக் கருத்தாய்ப் பார்ப்பவர்களுக்குமட்டுமே அவற்றினிடத்திலுள்ள விந்தைகள் ஒவ்வொன்றும் புலப்பட்டு மனதிற்கு மகிழ்ச்சியைத்தரும். தாது, மூலம், ஜீவன் ஆகிய இம்மூன்றினுள் ஒவ்வொன்றும் சில பதார்த்தங்களின் செயற்கையாலாகியது. தாதுவர்க்கத்தில் பொருள்களுக்கு ரஸாயன சம்பந்தமாத்திரமுண்டு. ஆனால், மூலவர்க்கத்திலும் ஜீவவர்க்கத்திலும் அப்படி இருப்பதோடுகூட உயிர்நிலையும் கலந்திருக்கிறது. ஜீவவர்க்கத்தைப்போல மூலவர்க்கம் இடம்விட்டுப் பெயர்கிறதில்லை. நீர் வாழ்வனவாகிய சில பூண்டுகள் அடியிலுள்ள மண்ணிலிருந்து தண்ணீருக்குமேலே வளர்ந்தெழுந்து பூக்கிறதானது ஓர்வித ரஸாயனத்தினாலன்றிக் கவர்ச்சியினாலன்று. மூலவர்க்கத்தைப் பல துண்டங்கண்டு பூமியில் நாட்டிவைத்து விர்த்திபண்ணலாம்; ஜீவவர்க்கத்தில் இப்படிச் செய்வது கூடாது. ஆனால், ஜீவவர்க்கத்தில் தாழ்ந்தனவாகிய கடற்காளான்போன்ற சிலவற்றைமட்டும் துண்டுதுண்டாகச் சேதித்தாலும் அவை விர்த்தியடையும். ஜீவவர்க்கங்களைப்போல மூலவர்க்கங்களுக்கு இமைப்பையுமில்லை, உணர்வுமில்லை. தொட்டாற்சிணுங்கியைப்போலொத்த சில மூலிகைகளுக்கு ஸ்பரிச உணர்ச்சி இல்லையோவெனின், அது உணர்ச்சியன்று, ஏதோ அந்தப் பூண்டின் இயற்கையென்றே சொல்லவேண்டுமென்பது பலர்கொள்கை. இளமரங்கள் செடிகள்முதலியவைகளில் வஸந்தகாலத்தில் ரஸம் மேனோக்கியும், இலையுதிர்சாலத்தில் கீழ்நோக்கியும் ஓடுகிறதாகையாலும், மேலும் அவை இலைவழியாகப் பிராணவாயுவை வெளியேவிட்டுக் கரிஅமிலவாயுவை உட்கொள்ளுகிறதாகையாலும், ரத்தவோட்டமும் வியர்வையும் மூலவர்க்கத்துக்கும் உண்டென்பது சிலருடைய கொள்கை. ஜந்துக்களை உறுப்புறுப்பாய் வெட்டினால் அவ்வுறுப்புகள் மூலவர்க்கத்தின் உறுப்புகளைப்போலப் பிழைக்கிறதில்லை. மூலவர்க்கத்துக்கு ஜீவவர்க்கத்துக்கிருப்பதுபோல ரத்தவோட்டமும் உயிர்ப்பும் உண்டென்று வைத்துக்கொள்ளினும் அவை அத்தனை சிறந்தனவல்ல. மூலிகைகள் நிலத்தில் வேரூன்றியிருந்தாலும், நீரிலிருந்தாலும், அல்லது அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருந்தாலும் வாயு உஷ்ணம் குளிர்ச்சி வெளிச்சம் இவற்றின் ஆதாரத்தினாலேதான் விருத்தியடைய

வேண்டும். பெரும்பான்மையாய் மூலவர்க்கங்களெல்லாம் மண்ணிருந்தால் பெருத்து வளரும். ஆனால், நீர்வாழ்வன, புல்லுருவி, ஆகாயப்பூண்டு முதலியவற்றின் வளர்ச்சிக்கு மண் அத்தனை அவசியமல்லவாதலால், மண்ணையே பிரதானமென்று சொல்வது அத்தனைச் சிறந்ததன்று. மூலவர்க்கங்கள் பூக்கின்றவையென்றும், பூவாதனவையென்றும் இரண்டு பெரும் பிரிவினையுடையன. மரம், பூண்டு, புல் முதலியன பூக்கின்றவை. மரங்களின் வளர்ச்சி பலவகை. தேவதாருவைப்போலொத்த சில ஜாதிமரங்கள், மேற்பக்கமாய் வருஷமொன்றுக்கு ஒவ்வொரு பட்டையாக விட்டுப் பெருத்து வளரும். பனைமரம் இவ்வாறு பட்டைவிடுகிறதில்லை. அதின் உள்ளேயுள்ள ஈர்க்குகள் நாளடைவில் ஒன்றாகச் சேர்ந்து வயிரமாகும். நீர்வேம்பைப்போலொத்த மரங்கள் நுனி உயர்ந்து வளரும். வெளிப்புறமாய்ப் பட்டைவிட்டுப் பருக்குமவைகளின் இலையில் நரம்புகள் பின்னல்போலப் பரந்திருக்கும்; உட்புறமாய் வளருமவற்றின் இலையின் நரம்புகள் ஒன்றற்கொன்று சமதூரமுள்ளவைகளாயிருக்கும். ஆனால், கடற்பாசியைப்போலொத்தவைகளில் இந்த வித்தியாசந் தெரிகிறதில்லை. மூலவர்க்கங்கள் பலவிதமாக விளைவிக்கப்படுகின்றன. அவற்றுள் வித்திலிருந்து முளைப்பதுதான் சாதாரணம்; பூக்கிறவைகளெல்லாம் இப்படித்தான். ஒவ்வொரு வித்தினுள்ளும் இலைகள் அற்புதமாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. வித்துகள் நிலத்தில் வேரூன்றி அவற்றிற்குள்ளே இருக்கிற இலைகள் வெளிப்பட்டு விரியுமளவும் அவ்விலைகளைக் காப்பாற்றுகிற சத்து அவற்றிற்குள்ளே அமைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அதிக உஷ்ணமாயிருந்தால் அவ்விலை தீய்ந்துபோம்; குளிர்ச்சியாயிருந்தால் அழுகிப்போம். இப்படிக்கெல்லாம் கெடாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே அவற்றிற்கேற்றவண்ணமாக ஆவரணமுண்டு. தேங்காய்க்கு நார், ஓடு முதலிய பலமான ஆவரணங்களிருக்கிறபடியால், அது கடலில் ஒரு தீவிலிருந்து மற்றொரு தீவிற்குச் சென்று அங்கே தங்கி முளைத்து விர்த்தியாகிறது. ஜாதிக்காயின் மேலோடு தோலைப்போலக் கெட்டியானது. உருளைக்கிழங்கை விதை, வேர், இரண்டினாலும் பயிர்செய்யலாம். இது உஷ்ணதேசங்களில் பூமட்டுந்தான் பூக்கும். நன்றாய்க் கிழங்கு வைக்கிறதில்லை; சீதளதேசங்களில் பூக்கிறதில்லையென்றாலும் கிழங்குமட்டும் நன்றாய் வைக்கும். கிளைகளை வளைத்து நிலத்தில் பதியவைத்திருந்து, வேரூன்றியபின்பு அவற்றைப் பெயர்த்து நடுவதற்குப் பதியென்று பெயர். ஆலமரங்களின் கிளைகளிலிருந்து விழுதிறங்கி, நாளடைவில் பூமியில் பரவி வேரூன்றிப் பெருமரமாவதியற்கை. ஒருமரத்தின் கிளையைத் தறித்து அதன் பால் வடியுமளவும் வெயில்படாமல் வைத்திருந்து, அதனோடு மற்றொன்றைச்சேர்த்து ஒரு உடல்போல ஒட்டிக்கட்டிப் பயிர்செய்வதற்கு ஒட்டு என்று பெயர். சிலவற்றின் இலைகள்கூட முளைத்துப் பயிராவதுண்டு! இவ்வாறாக மூலவர்க்கமானது அதன் கிழங்கு, வேர், அடி, கிளை, இலை, விதை இவை எல்லாவற்றாலும் பயிராகிறது. மூலவர்க்கமானது, நிலவளத்துக்கும், தேசப்பாங்கிற்கும் பயிர்செய்யும் திறனுக்கும் ஏற்றபடி விந்தைவிந்தையாய் உருமாறும். உருளைக்கிழங்கானது அமெரிக்காவின் உஷ்ணமண்டலத்திற்குரியது. அதை அங்கே கண்டுபிடித்தபொழுது அது உணவுக்கேற்ற

தல்லாத ஜல்லிவேருள்ளதாயிருந்தது. அதை பிரத்தன்நாட்டில் பயிர் செய்ததில், உணவுக்கேற்ற சிறந்த பெருங்கிழங்காயிற்று. ஒற்றைவரிசை மடலுள்ள காட்டுரோஜாச் செடிகளைக் கொண்டுவந்து பக்குவமாய்ப் பயிர்செய்தால், மடல் அதிகமாகவிட்டு நிறமாறு அழகாய்ப் பலவரிசையுள்ளதாய்ப் புஷ்பிக்கும்; முன்னிருந்த புல்லிதழும் பூந்தாதுவும் மட்டுப்படும்; கைத்திறமாய்ப் பயிரிட்டுப் பண்படுத்தினால், அசங்கியமான ஐந்து மடலுள்ளதும் நூற்றுக்கணக்கான அழகிய மடல்களைவிட்டுப் புஷ்பிக்கும். நீலநிறமுள்ள பூவானது வெண்மையாகவாவது சிவப்பாகவாவது மாறுமேயன்றி இன்னும் அதிக பிரகாசமுள்ள நீலவர்ணமாக மாறாது. நாம் உண்கிற கோதுமை, இலந்தைக்கனி முதலியன ஆதியில் வெகு அற்பமாயிருந்தவைகளே. சீதமண்டலத்திலுள்ள படர்கொடிகளெல்லாம் சிறிதானவை; உஷ்ணமண்டலத்திலுள்ள படர்கொடிகளில் சில ஒரு ஆட்பெருமனுக்கும் அதிகமானவை. அவை உயர்மரங்களையெல்லாம் சுற்றி ஒரேமூட்டாய் மூடிக்கொண்டிருப்பதைப்பார்த்தால் அதிக ஆச்சரியமாயிருக்கும். பிரம்புக்கொடிகள் ஆயிரம் அடி நீளமளவும் வளரும். ஆல் முதலிய சில விருக்ஷங்கள் மகா பெரிதானவை.

"தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன்சினையினும்
நுண்ணிதேயாயினு மண்ணல்யானை
அணிதேர்ப்புரவி யாட்பெரும்படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே."

இந்தியாவில் பரோச் என்னும் நகரத்துக்குச் சமீபத்தில் நருமதையாற்றிலுள்ள தீவில் 'கபீர்பர்' என்னும் ஓர் பெரிதான ஆலமரமிருக்கிறது. அதற்கு மூவாயிரத்துக்கு மேலான விழுதுகளுண்டு. அவற்றுள் முன்னூற்று ஐம்பது விழுதுகள் மிகப் பெரியவை. ஆல்முதலிய மரங்கள் மேன்மேலும் அபிவிர்த்தியடைவதைச்சுட்டி "ஆல்போல்தழைத்து, அறுகுபோல் வேரூன்றி, மூங்கில்போல்சுற்ற முசியாமல் வாழ்ந்திருப்பாய்" என்பது பழமொழி. இந்தப் பழமொழியைச்சொல்லிச் சிலர் வாழ்த்துகிறதுமுண்டு. ஓர்வகையான மரம் ஆலினும் பெரிது. அது ஆப்பிரிகாவின் மேல்கரையில் ஏராளமாய் வளருகிறது. அம்மரத்தை முதலில் கண்டுபிடித்தவர் அடமன்ஸன் என்பவராதலால், அது காரணமாக அம்மரத்திற்கு அவர் பெயரிட்டிருக்கிறார்கள். அந்தச் சாதிமரங்களில் ஒன்றின் அடிமரம் 104 அடி சுற்றளவுள்ளது. இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற புஷ்பங்களில், 'விக்டோரியா ரிஜியா' என்பது மிகவும் பெரிதானது; அது ஓர்வகையான ஆம்பல்; அதன் இலை பதினெட்டு அடி சுற்றளவும், பூ நான்கடி சுற்றளவும் கொண்டது. இந்த ஆம்பல் தென்அமெரிக்காவிலுள்ள பிரிடிஷ் கயானாவில் அகப்படும். சுமத்திராதீவில் ஓர்வகையான பூ நிலத்தில் ஓர் கிழங்குச்செடியில் பூக்கிறது. அது சற்றேறக்குறைய அமெரிக்காவிலுள்ள ஆம்பல் பூவைப்போலவே பெரிதானது. இலைகளுக்குள் தாளிப்பனையின் இலை மிகப்பெரிது. இலங்கைத்தீவில் இருநூறு அடி உயரமுள்ள தாளிப்பனை ஒன்றின் இலை பதினொரு அடி நீளமும், பதினாறு அடி அகலமும் இருந்ததென்று அங்கே போய்ப்பார்த்தவர் ஒருவர் எழுதியிருக்கிறார். கண்ணுக்ககப்படாமல் பூதக்கண்ணாடியைக்கொண்டு பார்க்கத்தக்க நுட்பமான மூலவர்க்கங்கள் எத்தனையோ உண்டு.

அவற்றை நாம் எங்கும் காணலாம். தென்அமெரிக்காவில் ஓர்வித மான பால்மரமுண்டு; அது சமுத்திரமட்டத்துக்கு மூவாயிரம் அடிக்கு மேலுள்ள மலைப்பிரதேசங்களில் பயிராகும். அதற்குப் பால் மரம் என்று பெயரிட்டிருக்கிறார்கள்; அங்குள்ள ஏழைகளும் வேலையாட்களும் காலையில் அம்மரத்தின் அடியைச் சூழ்ந்துகொண்டு அதன் பட்டையைக் கொத்தி உள்ளிருந்து பெருகுகிற பாலைப் பருகுவார்கள். உஷ்ணமும் பிரகாசமும் மூலவர்க்கத்துக்குமுண்டு. தென்அமெரிக்காவில் ஓர்வகைப் பூவுண்டு; அதைக் கையால் தொடுகையில் அதனிடத்திலுள்ள உஷ்ணம் தெரியும். அவ்வகையான மூலிகைகளை ஒவ்வோர் காலங்களில் இரவில் பார்க்கையில் ஓர் காந்தி தோன்றும். ஜோதிர் லதை என்பது இரவில் பிரகாசிக்கிற இவ்வகையைச்சேர்ந்த ஓர்விதமான மூலிகை. சில மூலிகைகள் சிணுங்கிக்கொள்வதுண்டு. சிணுக்கமானது ஆகாயப்பாங்கினாலும், மேலே வேறுபொருள்கள் படுவதினாலும் சுயேச்சையினாலும் இப்படி மூன்றுகாரணங்களால் உண்டாகும். சூரியாஸ்தமயத்திற்குப்பின் தாமரைமுதலியவற்றின் மலர் கூம்புவதையும், புளி முதலியவற்றின் இலைகள் மூடிக்கொள்வதையும் ஆகாயப்பாங்கைச் சேர்ந்ததென்பார்கள். தொட்டாற்சிணுங்கி சிணுங்கிக்கொள்வதானது மேலே வேறுபொருள்படுவதினால் உண்டாகிறது. சில மூலிகைகளின் இலைகள் ஈரலிதழ்போலிருக்கும். அவற்றில் யாதேனும் பூச்சிகள் போய் உட்காந்தால் உடனே இலைகளை மூடிக்கொண்டு அவற்றைத் தின்றுவிடும். சிலவற்றின் நெற்றுகள் டப்பென்று வெடித்து அவற்றின் உள்ளேயிருக்கிற விதைமுதலியவைகளை வெளியே வேகமாய்ப்போய் விழும்படிச் செய்வதானது சுயேச்சையினால் உண்டாவதைச் சேர்ந்தது. விஷமுள்ள எரு விட்டால் மூலிகைகள் பட்டுப்போம். பாஷாணஜலத்தைச் செடிகளுக்கு ஊற்றினால் அவைகள் மஞ்சள்நிறமாக மாறிக் காய்ந்துபோம். பாஷாணத்தை மூலிகைகளின் பட்டையின்வழியாக உள்ளே செலுத்தினால் அவை சீக்கிரம் பட்டுப்போம். இந்த விசித்திரங்களையெல்லாம் பார்த்துப் பார்த்துத்தான் அறிந்துகொள்ளக்கூடும்.

பழையகதையும் புதிய படிப்பினையும்.

"தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு"

என்கிறபடி, தீயினாற் கொளுத்துவதைவிட நாவினாற் கொளுத்துவது கொடிது. நாவினாற் கொளுத்துவதாவது—பொய்சொல்லுதல், புறங்கூறுதல், வீண்பழிபோடுதல் முதலாய் வாய்க்கொழுப்பைக் காட்டிப் பிறரைப் புண்படுத்தலாம். பொய்சொல்லுதலும் புறங்கூறுதலும் மிகவும் ஈனமான செய்கையென்றாலும் அவை,

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கந் தரும்"

என்கிறபடி, அவற்றைப் பேசுகின்றவர்களுடைய மதியீனத்தைத்

தெரிவிக்கின்றவையேயொழிய பிறர்க்கு அவ்வளவாய்த் தீங்கு விளைவிப்பவையல்ல. ஒருவர்மேல் இல்லாத தோஷங்களையெடுத்துப் பழிப்பாய்ப் பேசுகிறவர்களுடைய நாக்கையே விஷமுள்ள நாக்கென்று சொல்லவேண்டும். அது செய்யுமளவு தீங்கு வேறொன்றும் செய்யாது; உலகத்தையே ஒருமிக்க அழித்துவிடவேண்டுமென்றாலும் அழித்துவிடும். இதற்கு உதாரணமாய்ச் சிறியகதை ஒன்று உண்டு:

ஒரு பெரிய ஆலமரத்தின் நுனியிலே கழுகொன்று நெடுநாளாய்க் கூடுகட்டி வாழ்ந்துகொண்டிருந்தது. அதன் அடிமரப் பொந்திலே ஒரு பூனை குடிகொண்டிருந்தது. அம்மரத்தடியிலே ஒரு பன்றியும் தன் குட்டிகளோடுகூடச் சிறிதுகாலமாக நிலைகொண்டிருந்தது. அவைகளுக்கெல்லாம் அது மிகவும் ஏற்ற இருப்பிடந்தான். "பூனைக்கில்லை தவமுந் தயையும்" என்கிறபடி மிகவும் இரக்கமற்ற கடுநெஞ்சுள்ளதான பூனைமட்டும் தன் நஞ்சுள்ள நாவை நிலைநிறுத்தி வைத்திருக்குமாயின், அவையெல்லாம் அங்கேயே நெடுங்காலம் சுகமாக வாழ்ந்திருக்கும். நாமும் வாழ்ந்து அயலாரும் வாழ்கிறதாவென்கிற பொறுமைதவிர வேறொரு காரணமுமின்றிப் பூனை ஒருநாள் தனக்குச் சமீபத்தில் குடிகொண்டிருந்த கழுகண்டைசென்று, அப்பா தோழனே! உனக்குப் பெருத்த அபாயம் வரப்போகிறதேயென்று பயந்து நான் இப்போது உன்னிடம் ஓடிவந்தேன்; அதோ இம்மரத்தடியிலிருக்கின்ற பன்றி எப்போதும் வேறொரு வேலையுமின்றி இம்மரத்தின் வேரைக் கிளறுவதே காரியமாயிருக்கின்றது. அதன் நோக்கத்தைப்பார்த்தால், உன் குஞ்சுகளை எளிதிலே பிடித்துக்கொள்ளும்படி இம்மரத்தை வீழ்த்தக் கருதியிருப்பதுபோலக் காண்கிறது என்றது. அதன் வாய்க்கொழுப்பு இவ்வளவோடு அடங்கிற்றோ? இதைச் சொல்லிமுடித்ததும் அங்கிருந்து இறங்கி மரத்தடியில் பன்றியண்டைவந்து, என் நேசனே! நெடுநாளாய்க் கூடி வாழ்ந்துகொண்டிருந்த பழக்கத்தால் உனக்கு ஒரு தீங்கு நேரிடப்போகிறதென்பதைக் கேட்டு மனந்தாளமாட்டாமல் ஓடிவந்தேன். நானானால் இப்படி உன்னைப்போல் அடிக்கடி குட்டிகளைத் தனியே பெருத்த அபாயத்திற்கு ஆளாகும்படி விட்டுவிட்டு நெடுந்தூரம் ஓடிப்போக மனந்துணியமாட்டேன். நீ சுகமாக வாழ்ந்தாலென்ன, வாழாமற் போனாலென்ன? அதனால் எனக்கு யாதொரு கெடுதியுமில்லை; உன்னுடைய நன்மைக்காகவே சொல்லுகிறேன்: இம்மரத்துநுனியில் துஷ்டப்பறவையொன்றிருக்கிறதே; அது உன் குட்டியைக்கொன்று தன் சுற்றத்திற்கு விருந்தளிப்பதாகப் பேசிக்கொண்டிருக்கக் கேட்டு மிகவும் துக்கமடைந்து அந்தச் செய்தியை உன்னிடம் அறிவிக்க ஓடிவந்தேன். எச்சரிக்கையாயிரு; இந்நேரம் என் குட்டிகள் எப்படி ஆயினவோ என்று சொல்லிப்போய்விட்டது. அது

முதல் அம்மரத்தின் கீழும்மேலும் கோபமும் திகிலும் நாளுக்கு நாள் மிகவும் அதிகமாகிப் பன்றியும் கழுகும் தம்மிருப்பிடத்தை விட்டு அசையாமல் இரையுந்தேடாமல் தாமும் பட்டினியாய்ச் செத்துத் தம்குட்டிகளையும் இரையில்லாமல் கொன்றுகொண்டிருந்தன.

எதையும் ஆவலாய்க் கேட்கக் காத்திருப்பவன் எப்படிப்பட்ட கதையைக் கேட்டாலும் அதை உண்மையென்று நம்பி மனம் புண்பட்டு வருந்துவான். மேற்சொன்ன கதையிலே பூனை சொன்னபேச்சு சொற்பந்தான்; ஆயினும் அதனல் ஒருநாளும் தீர்க்கக்கூடாத தீமை விளைந்தது. குறிப்பான பேச்சுகளும் குசமசக்கான பேச்சுகளும் செய்கின்றவளவு தீங்கு மற்றொன்றும் செய்வதில்லை. உடம்பில் ஒரு புண்பட்டால் அது சரீரத்தில்மட்டும் நோயுண்டாக்கும்; பழிப்புச்சொல்லோ, முதலில் ஒரு நெருப்புப் பொறிபோலிருந்து படீரென்று வெடித்துத் தேசமெங்கும் பரவி ஒருவனுடைய பெருமையையும் பிரசித்தியையும் அழித்து அவனைச் செத்தவனுக்கும் கேடாக்கிவிடும். நன்மையான பேச்சுகளைவிடத் தீமையான பேச்சுகளையே விசேஷமாய் நம்புவது உலகவியற்கை; இதென்ன துர்ப்பாக்கியமோ! ஆதலால் ஒருவனைப் பற்றி நன்மையாய்ப்பேச விருப்பமில்லாவிட்டால், ஒன்றும் பேசாமலிருப்பதே நலம். ஏனெனில், அதனல் பிறர்க்கு நன்மைவிளையாமற்போனலும், அவர்களுக்கு வீணன மனவருத்தமொன்றும் உண்டாகாதே. பத்துபேர்சேர்ந்து ஒருமுகமாய் ஒருவனைப் பழிப்பார்களாயின், மறுபடி அவனுக்கு நல்லவனென்கிற பெயருண்டாகுமா? இப்படி ஒருவன் தன் நாவொன்றை அடக்காமையால் விளைகிற தீங்குக்கு அளவில்லை. ஆனதுபற்றியே,

> "யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்று திருவள்ளுவநாயனரும் நாவையடக்குவதே எவர்க்கும் முக்கியகாரியமென்றும், அப்படி அதை அடக்காவிடின் மிகுந்த துன்பத்திற்கு இடமாகுமென்றும் கூறினர்.

பொய் புரட்டு முதலிய தீக்குணமுடையோர்களுக்கு வரிபோடாமலிருப்பது யாதுகாரணமோ? தீயோர்களுக்கு வரிபோடுகிறதென்று ஏற்பட்டால், அப்பொழுது எப்படிப்பட்ட தீக்குணமுடையவர்களும் நல்வழியில்நடக்க முயல்வார்களல்லவா? அப்போது இவ்வுலகமெல்லாம் எவ்வளவு ஒழுங்குபட்டு இருக்கும்! ஆயினும் உலகத்துக்குப் படல்சாத்த நம்மாலாகுமா? ஆதலால் நாம் செய்யவேண்டியகாரியம் என்னவெனில், நாம் கண்ணல் காண்பதையெல்லாம் எப்படிப் புசிக்கத் துணிவதில்லையோ, அப்படியே காதினல் கேட்பதையெல்லாம் உண்மையாக நம்பத் துணியக்

கூடாது. மேற்சொன்ன கதையில் பூனையின் பொய்ப்பேச்சை நம்பிக் கழுகும் பன்றியும் பட்டபாடொன்றே அதன் கொடுமைக்குத் திருஷ்டாந்தம் போதாதா! தூஷணமான பேச்சுகளைக்கேட்டு அதற்குத் தங்கள் மனதில் வசிக்க இடங்கொடுத்து ஒருவரும் அதை ஆதரியாதிருப்பார்களாயின், பின்பு அப்படிப்பட்ட பேச்சுகளுக்குப் பிழைப்பேது? தமக்குத்தாமே அவை அழிந்துபோகவேண்டுவதுதான். எப்போதும் காதை விரித்துக்கொண்டு யார் என்ன குற்றஞ்சொல்வார்களென்று கேட்க ஆவல்கொண்டிருப்பவர்கள் அடங்குவார்களாயின், நாவையடக்கமாட்டாமல் வாய்ப்பதட்டத்துடன் பிறர்மேல் பழிகூறக் காத்திருப்பவர்களும் அந்தக்ஷணமே அடங்குவார்கள். முற்காலத்தில் ஒரு அரசனிருந்தான்; அவன் முன்னிலையில் எவனாவது ஒருவனிடத்தில் குற்றங்கூற வருவனாயின், அப்போது அவன், நல்லது இருக்கட்டும்; அவனைப்பற்றி நன்மையான பேச்சு ஏதாவது உண்டாவென்று கேட்பது வழக்கமாம். அப்படி அன்னம் நீரை வேறாய்ப் பிரித்துப் பாலைமட்டும் பருகுவதுபோல் பிறருடைய தீக்குணங்களைத் தள்ளி நற்குணங்களையே கிரகிக்க முயல்வார்களாயின், அப்படிப்பட்டவர்கள் இம்மையில் நல்லோரென்று பிரசித்திபெற்றுப் பேரும்புகழுமாய் வாழ்வதுமன்றி, கடவுளுடைய கருணைகடாக்ஷத்திற்குப் பாத்திரராகி மறுமையிலும் பெருமைபெற்று வாழ்வார்கள்.

சிறுவர்க்கான கதை.

இரண்டு சகோதரர்கள் (தொடர்ச்சி.).

முன் அந்தச் சிறுவேடன் ஒரு நாகாசுரனுடைய மலையில் ஒரு வீரனால் கொல்லப்பட்டுத் தன் மிருகங்களுடைய திறமையால் திரும்பி பிழைப்பிக்கப்பட்டானென்று சொன்னோமே. அந்த வேடன் உயிர்வந்து எழுந்ததும் திரும்பிப்பார்த்துப் பக்கத்தில் தன் அருமைமனையாட்டியைக் காணாமல், நம்மோடிருக்க மனமில்லாது நாம் தூங்குகிற தருணம்பார்த்து அவள் எழுந்து ஓடிப்போய்விட்டாளோ என்னவோவென்று விசனமடைந்தான். அது இருக்கட்டும்; இந்த அதிசயத்தைப் பாருங்கள்: சிங்கம் அவன் தலையை உடலோடுகூட்டின துரிதத்தில் முன்பின்தெரியாமல், முகத்தை முதுகுபக்கமாய்த் திருப்பிவைத்துச் சேர்த்தது. இந்த மாறாட்டம் அந்த மிருகங்களுக்குந் தெரியவில்லை; வேடனுக்கும் நடுப்பகல் வரையில் இது இன்னதென்று தெரியவில்லை. பின்பு பசியெடுத்துப் புசிக்கப்போம்போது அவன் கையைத்தூக்கிவாயண்டை கொண்டு போனான். கைக்கும் வாய்க்கும் வழிதெரியவில்லை. அப்போதுதான்

அவனுக்குத் தலை பின்புறமாய்த் திரும்பியிருக்கிறதென்று தெரிந்தது. அந்த அற்புதத்தை இன்னதென்று கண்டறியக்கூடாமல் அவன் நடந்த வரலாறு என்னவென்று அந்த மிருகங்களைக் கேட்க, சிங்கம், அலுத்துத் தாங்களெல்லாம் தூங்கிப்போனதும், பின்பு எழுந்துபார்க்கையில் அவன் தலைவேறு முண்டம்வேறாய் வெட்டுண்டுக் கிடக்கிறதைக்கண்டு, முயல் கொண்டுவந்த ஒருவித ஜீவப்பூண்டினால் அம்முண்டத்தையும் தலையையும் ஒன்றாய்ச் சேர்த்து அவனைப் பிழைப்பித்ததும், அப்படிக் கூட்டும்போது தெரியாமையால் தலையைப் பின்புறமாய்த் திருப்பிவைத்து இணைத்துவிட்டதுமாகிய கதையையெல்லாம் சொல்லி, போனது போகட்டும்; இமைப்பொழுதில் இதைச் சரிப்படுத்திவிடுகிறேன் என்றுசொல்லி மறுபடியும் அவன் தலையை வெட்டி நேராகவைத்து முன்போலவே சொஸ்தப்படுத்தி அவனைப் பிழைப்பித்தது.

அதைப்பார்க்க அவ்வேடனுக்கு மிகவும் ஆச்சரியமாயிற்று. ஆயினும் தன் மனையாளைக் காணாத துக்கத்தால் ஒருவிதப் பித்தம் பிடித்தவன்போல நின்றவிடத்தில் நிற்காமல் அவன் ஊரூராய்த் தன் மிருகங்களைக் கூத்தாடச்செய்துகொண்டு சீமைசுற்றித்திரிந்தான். இப்படி ஒருவருஷமானபின்பு அவன் முன் தான் நாகாசுரனைக் கொன்ற பட்டணத்திற்குத் தற்செயலாய்ப்போனான். அவன் போனபோது அப்பட்டணம் முழுதும் வெகு சிறப்பாய்ப் பந்தல்முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டு எங்கும் பாட்டுங் கூத்துமாய்ச் சந்தோஷமே மேலிட்டிருந்தது. அதுகண்டு அவ்வேடன் இப்போது இப்பட்டணத்தில் என்னவிசேஷமென்று தான் இறங்கியிருந்த சத்திரக்காரனைக்கேட்க, அவன் ஒருவருஷத்திற்கு முன்னே எங்கள் அரசன்மகளை ஒரு அசுரனுக்கு பலியாய்க் கொண்டுபோய்க் கொடுக்கும்படி நேரிட்டது; அப்போது எங்கள் சேனாபதியொருவர் அவ்வசுரனைக்கொன்று அம்மகளை மீட்டுக் கொண்டுவந்தார். அதற்காக இப்போது அவர்க்கும் அம்மகளுக்கும் கலியாணம் நடக்கப்போகிறது; அதற்காகவே இப்பட்டணமெங்கும் மகிழ்ச்சிகொண்டிருக்கிறதென்றான்.

மறுநாள்தான் அந்தக் கலியாணம் நடத்தும்படி நிச்சயித்திருந்தது. அந்தச் செய்தியைக்கேட்டு வேடன் இதென்ன புதுமையாயிருக்கிறதென்று மனதிலெண்ணிக்கொண்டு சத்திரக்காரனைப்பார்த்து, நான் இங்கிருந்தபடியே அரசன்மாளிகையிலிருந்து ராஜாக்கள் புசிக்கிற போஜனம்முதலியவை அழைப்பிக்கிறேன் பார்க்கிறீராவென, அதுகேட்டு அவன், நீர் அப்படி அழைப்பிப்பாயானால், இதோ இந்தப் பதினாயிரம் ரூபாயையும் நான் உனக்கு இனாமாய்த் தருகிறேன் என்று பந்தயம் கட்டினான்.

அவ்வேடனும், அப்படி நடக்காவிட்டால் நான் இந்தப் பதினாயிரம் ரூபாயை உமக்கு இனாமாய்க் கொடுத்துவிடுகிறேன்

என்றுசொல்லித் தானும் பந்தயங்கட்டித் தன் முயலை அழைத்து, நீ வேகமாய் ஓடுபவனாயிற்றே; அரசன்வீட்டுக்குப்போய் அரசன்புசிக்கிற போஜனத்தில் எனக்குக் கொஞ்சம் வாங்கிக்கொண்டு வா என, அது மற்றவைகளுக்கெல்லாம் கீழ்ப்பட்டமிருகமாதலால், அந்தக் கட்டளையை வேறொன்றின் தலையிலும் சுமத்தமாட்டாமல், தானே போய்வருவதாய் ஒப்புக்கொண்டது. அப்படியே புறப்பட்டுப்போகும்போது அது, நாம் தனியே போகிறோமே; தெருவழியாய்ப் போகும்போது வேட்டைநாய் ஏதாவது வந்து நம்மைப் பிடித்துக்கொள்ளுமே என்று திகிற்பட்டுக்கொண்டேபோயிற்று. போகையில் வழியே அது நினைத்தபடியே வேட்டைநாயொன்று அதைத் துரத்திக்கொண்டு ஓடிவந்ததென்றாலும், முயல் வெகு சீக்கிரமாய் அதற்குமுன் ஓடி அரசன்வீட்டிற் புகுந்துகொண்டது. அங்கே அம்முயலைக் கண்டுபிடிக்கமாட்டாமல் நாய் ஓடிப்போனதும், முயல் முன் ஒருவருஷத்திற்குமுன்னே பார்த்த குறிப்பைக்கொண்டு அரசன்மகளிருக்கும் இடந்தேடிப்போய் அவள் காற்கீழ்ப் பதுங்கிப் பதுங்கிநிற்க, அவள் அதைப்பார்த்து அதன் கழுத்திலிருந்த தன் பூணாரத்தினால் அதைத் தெரிந்துகொண்டு, உடனே அதை எடுத்து மடியில்வைத்துக்கொண்டு, என் அருமை முயலே எங்கேவந்தாயென்று கேட்க, எங்கள் நாயகன் முன் அந்த அசுரனைக் கொன்றாரே, அவர் இப்போது இங்கே வந்திருக்கிறார். அவர் தனக்குக் கொஞ்சம் அரசர்கள் புசிக்கின்ற போஜனம் வேண்டுமென்றார். உங்களைக்கேட்டு அதை வாங்கிக்கொண்டு போகவேண்டுமென்று வந்தேன் என்றது.

அந்தப் பேச்சைக்கேட்டு அவள் மிகவும் சந்தோஷமடைந்து தன் சமையற்காரனை அழைத்து உயர்ந்த சாப்பாடு கொஞ்சம் கொண்டுவரச்சொல்ல, அவன் அப்படியே கொண்டுவந்ததைப் பார்த்து முயல், தாயே! இதை நான் எடுத்துக்கொண்டு போகமாட்டேன்; வழியில் நாய்கள் இதைப் பிடுங்கிக்கொள்ளும்; உங்கள் வேலைக்காரனே கொண்டுவந்தால் நல்லதென்று சொல்லக் கேட்டு, அப்படியே அவள் அதைத் தன் வேலைக்காரன் கையிற் கொடுத்தனுப்பினாள். தன் யஜமானன் இருக்கும் வீட்டுவாயிலண்டை போனதும் முயல் அந்த உணவைத் தன் கையில் வாங்கிக்கொண்டு யஜமானனண்டை கொண்டுவைத்தது. முயல் உணவு கொண்டு திரும்பிவந்ததும் வேடன் அவ்வீட்டுக்காரனை அழைத்து, இதோபார்த்தீர்களா? நான் சொன்னபடியே வந்துவிட்டது. நீர் பந்தயங்கட்டின பதினாயிரம் ரூபாயும் என்னுடையதுதானென்று சொல்லி அதை எடுத்துக்கொண்டான்.

திரும்பவும் அவ்வேடன் அந்த வீட்டுக்காரனைப்பார்த்து, இன்னும் பற்பல இனியபண்டங்கள் அரசன்வீட்டினின்றும்

அழைப்பிக்கிறேன் பார்க்கிறீரா என, அவன் முன்போல் மறுபடியும் பந்தயங்கட்டத் துணியாமல் அவனுடைய பெருமையை மட்டுங் கண்டு மகிழ்ந்துநின்றான். உடனே வேடன் தன் மற்ற மிருகங்களையும் ஒவ்வொன்றாய் அனுப்பி மிகவும் நேர்த்தியான உயர்ந்த தின்பண்டங்களும் பானவகைகளும் வரவழைத்தான். இப்படித் தனக்கு வேண்டியவைகளையெல்லாம் வரவழைத்தானபிறகு அவன், தன் ஐந்து மிருகங்களையும் சுற்றி உட்காரவைத்துக் கொண்டு, அவ்வீட்டுக்காரன் இதென்ன ஆச்சரியமென்று பிரமித்துநிற்க, அவற்றை அவைகளுக்கும் பகிர்ந்துகொடுத்துத் தானும் திருப்தியாய்த் தின்று, இன்னும் அவ்வரசிக்குத் தன்னிடத்திலுள்ள நேசம் மாறவில்லையென்று நினைத்து மிகவும் சந்தோஷமடைந்தான்.

பின்பு அவர்களெல்லாரும் புசித்துச் சந்தோஷமாயிருக்கையில், வேடன் மறுபடியும் அவ்வீட்டுக்காரனைப்பார்த்து, நல்லது, நான் இப்போது அரசர்களுடைய உணவுகளைத்தான் வரவழைத்துப் புசித்தேனே; உங்கள் அரசன் மகளைக்கூட நானே கலியாணம் செய்துகொள்ளப்போகிறேன் பார்க்கிறீரா என, அந்த வீட்டுக்காரன் அதுமட்டும் ஒருபோதும் நடவாதபேச்சு; அவ்வரசியை வேறொருவர்க்குக் கொடுக்கும்படி முன்னமே நிச்சயம்செய்து அதற்கு வேண்டிய சடங்குகூட நடந்துபோயிற்றே என்றான்.

அதுகேட்டு வேடன், முன் தனக்கு அசுரன்மலைமேல் அவ்வரசி கொடுத்த கைக்குட்டையை எடுத்துக்காட்டி, என்னதான் நடக்கட்டும்; அவ்வரசியை நான் கலியாணஞ்செய்துகொள்ள இது ஒன்றே போதுமென, அம்மனிதன், நீ என்னதந்திரந்தான் பேசு; இந்தக் காரியம்மட்டும் ஒருபோதும் நடக்கமாட்டாது. நீ அவளைக் கலியாணஞ்செய்துகொள்வாயானால் இந்த வீடுந்தோட்டமும் உனக்குச் சொந்தமாகிவிடுமென்றான்.

இதிப்படியிருக்க, அப்பட்டணத்தரசன், இன்றையதினம் பல காட்டுமிருகங்கள் நம்மகளிடத்திற்கு வருவதும் போவதுமாயிருக்கின்றனவே, என்னவிசேஷமென்று சந்தேகங்கொண்டு தன் மகளை வரவழைத்துக்கேட்க, அந்தப்பெண், அந்தச் செய்தியை உங்களிடத்தில் நேராய்ச்சொல்ல எனக்குத் துணிவு உண்டாகவில்லை. அந்த மிருகங்களின் யஜமானனை வரவழைத்துக்கேட்டால் எல்லாச் செய்தியும் நன்றாய்த் தெரியவருமென்றாள்.

அப்படியே அரசன் அவ்வேடனை அழைத்துவரும்படி ஒரு தூதனை அவனிடத்திற்கு அனுப்ப, அந்தத் தூதன் அரசன்கட்டளையை மேற்கொண்டு வேடனிடஞ்சென்று தங்களை மகாராஜா வரவழைக்கிறாரென்றான். அப்போதுதான் அவ்வீட்டுக்காரனும் வேடனும் பந்தயம்கட்டி முடிந்ததருணம். இந்தத் தூதனைப்பார்த்த

தும் வேடன் மிகவும் சந்தோஷமடைந்து, இதோ பார்த்தீரா, என்னை அழைத்துவரும்படி ராஜா தூதுகூட அனுப்பிவிட்டார்; ஆயினும் நான் இப்படியே அவரிடம் போகமாட்டேன்; தரித்துக்கொள்ளச் சிறந்த ஆடையாபரணங்களும், ஏறிப்போக எட்டு குதிரைபூட்டிய உயர்ந்த ரதமும், சூழ்ந்துவரப் பல சேவகர்களும் அரசன் அனுப்பினுலொழிய நான் அவரிடம் போகமாட்டேனென்று அவ்வீட்டுக்காரனுடன் சொல்லி, வந்த தூதனுக்கும் அப்படியே பதில் உரைத்து அனுப்பினுன்.

அந்தச் செய்தியைக்கேட்டு அரசன், இதென்ன அவன் இப்படிச் சொல்லியனுப்பினுனேயென்று தன் மகளுடன்சொல்ல, அவள், அவர் கேட்கிறபடியே மிகவும் சிறப்புடன் அவரை வரவழைக்கலாம்; அதனுல் நமக்கு மிகவும் பெருமையுண்டாகுமெனக்கேட்டு, அப்படியே தன் பரிஜனங்களையெல்லாம் அரசன் அவன் வீட்டுக்கு அனுப்பினுன். அவையெல்லாம் தன் வீட்டிற்கு வந்ததும் வேடன் ஆடையாபரணங்களை அணிந்துகொண்டு தன் மிருகங்களோடுகூட ரதத்தில் ஏறிப் பல பரிவாரங்கள் சூழ்ந்துவரப் புறப்பட்டு அரசன்அரண்மனைபோய்ச்சேர்ந்தான். அவன் வருவதைப்பார்த்து அரசன் எதிர்கொண்டழைத்து அவனை அரண்மனையில் தன் ஆசனத்திற்கருகே சிறந்த ஒரு ஆசனத்தில் உட்காரவைத்துக் கொஞ்சநேரம் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தான். அப்போது அவ்விடத்தில் அரசனுடைய மகள், அம்மகளை அன்றையதினம் கலியாணஞ்செய்துகொள்ளக் காத்திருக்கும் சேனுபதி முதலியவர்களும் வந்து நிறைந்திருந்தார்கள். அவர்களுக்கெதிரே முன் அந்த வேடன் கொன்ற நாகாசுரனுடைய வடிவத்தை அப்படியே பதப்படுத்தி உயிருள்ள வடிவம்போலவே வெகு அழகாய் எடுத்துக் கட்டிவைத்திருந்தார்கள்.

அரசன் அவ்வேடனுேடு பேசுகையில் எதிரிலிருந்த வடிவத்தைப்பார்த்து, இதோ ஒரு அசுரவடிவமிருக்கின்றதே, இதை ஒரு வருஷத்திற்குமுன்னே இந்தச் சேனுபதி கொன்றுபோட்டார்; அந்தப் பெருமைக்காக இன்றையதினம் என் மகளை இவர்க்குக் கன்னிகாதானஞ் செய்துகொடுக்கச் சித்தமாயிருக்கிறேன் என்றுன்.

அந்தப் பேச்சைக்கேட்டதும் வேடன் சரேலென்று எழுந்து, அங்கே கட்டியிருந்த நாகாசுரன் வடிவத்தின் ஏழு வாயையுந் திறந்துபார்த்து, ஆனுல் இவற்றின் நாக்கெங்கே என்றுன். அதைக் கேட்டவுடனே அண்டையில் உட்காந்திருந்த வீரன் பெருந்திகிலடைந்து முகத்தின் ஒளியெல்லாம் மாறி ஒன்றும் பதில் உரைக்கத்தோன்றுமல் சிறிதுநேரம் தடுமாறிநின்று கடைசியில், இவைகளுக்கு நாக்கே கிடையாதென்று நா தழதழத்துப்பேசினுன். அதற்கு வேடன், பொய்பேசுகிறவர்களுக்குத்தான் நாக்கு கிடையாது; நாகாசுரனுடைய நாக்குகள், அவ்வசுரனைக் கொன்றவ

னுடைய ஜயத்திற்கும் கீர்த்திக்கும் குறிப்பாய், இதோ இருக்கின்றன பாருங்கள் என்றுசொல்லித் தன்னிடமிருந்த கைக்குட்டையை அவிழ்த்து அதனுள் இருந்த ஏழு நாக்குகளையும் காட்டினான். அவை அங்கிருந்த வடிவத்தின் வாய்களுக்குச் சரியாய்ப் பொருந்தின. பின்பு அவன் அவ்வரசன்மகளின் பெயர்பதிந்த கைக்குட்டையை எடுத்து அவளுக்குக் காட்டி இதேதென்று கேட்க, அவள், இது என்னுடையதே; இவ்வசுரனைக் கொன்றவனுக்குப் பரிசாக நான் இதைக் கொடுத்தேனென்றாள். மறுபடியும் அவன் தன் மிருகங்களின் கழுத்திலிருந்த மணிகளைக் கழற்றிக்காட்டி இவையெல்லாம் யாருடையவையென்று கேட்க, என்னுடையவைதாம்; இந்தக் கொடிய அசுரனைக் கொல்வதற்குத் துணைசெய்த மிருகங்களுக்கு நான் சந்தோஷப்பட்டுக் கொடுத்தவைஎன்றாள். அதைக்கேட்டு வேடன், பார்த்தீர்களா! இவ்வசுரனைக்கொன்ற ஆயாசத்தால் நான் மெய்ம்மறந்து தூங்குகையில், இந்தச் சூரர்வந்து என்னைக் கொன்றுவிட்டுத் தானே அசுரனைக் கொன்றதாக உங்களிடம்வந்து பொய்பேசி உம்மகளை மணம்புரியக் காத்திருந்தாரென்றான். பின்பு தன்னைத் தன் மிருகங்கள் பிழைப்பித்ததுமுதலாய் அன்றுவரையில் நடந்த கதைகளையும் சொன்னான்.

அதைக்கேட்டு அவ்வரசன் தன் மகளைப்பார்த்து, ஆனால் நீ இந்தச் செய்தியையெல்லாம் இத்தனைநாள் என்னிடத்தில் வெளியிடாமல் ஏன் ஒளித்தாயென்று கேட்க, அவள், இவர் சொல்வதெல்லாம் உண்மையே; இச்செய்தியை நான் வெளியிட்டால் என்னை அந்தக்ஷணமே கொன்றுபோடுவதாக இந்தச் சேனாபதி பயமுறுத்தினதனால், நான் இத்தனைநாள் அதை என்மனதிலேயே வைத்து வருந்திக்கொண்டிருந்தேன்; இப்போது அது தானே வெளியாயிற்று; என்னிடத்தில் குற்றமில்லையே. நான் கலியாணத்திற்குக் காலதாமதஞ்செய்ததற்கும் காரணம் இதுதானென்றாள்.

அந்தப் பேச்சைக் கேட்டவுடனே அரசன் தன் சேனாபதியைக் குற்றவாளியாக்கி, ஆறுபண்டிதர்களை நியாயாதிபதிகளாக நியமித்து அவனை விசாரிக்கச்செய்தான். அவர்களும் அவன் குற்றவாளிதானென்று தீர்மானித்து விருஷபங்களைவிட்டு அவனைத் துண்டந்துண்டமாகக் கிழித்துவிடும்படித் தீர்ப்புசெய்தார்கள்.

பின்பு அந்த வேடனுக்கும் அரசன்மகளுக்கும் வெகு வைபவமாய் விவாகம் நடத்தப்பட்டு, இளவரசனென்கிற பட்டமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. உடனே அவன் தன் சொந்தத் தாய்தந்தையர்களையும், நடுக்காட்டிலே தன்னை வைத்தாதரித்து வித்தைகற்பித்த ஆசானையும் அவ்விடத்திற்கு அழைப்பித்து வேண்டிய பொருள்கொடுத்து அவர்களை ஆதரித்தான். தன்னுடன் பந்தயம்போட்ட சத்திரக்காரனையும் அவன் மறக்கவில்லை. அந்தச் சத்திரக்காரனை அழைப்பித்து, இதோ பார்த்திரா; நான் சொன்ன

படி அரசியைக் கலியாணஞ்செய்துகொண்டேன்; உம்முடைய வீடுந் தோட்டமும் என்னுடையவைதாம் என்று சொன்னான். அதற்கு அவன், ஆம்; நியாயப்படி உம்முடையவைதாமென, அவ்விளவரசன், நியாயப்படி என்னுடையவையானாலும், என் பிரீதியின்படி மறுபடியும் இவை உம்முடையவையே ஆகட்டுமென்று சொல்லி அந்த வீட்டையுந் தோட்டத்தையும்மாத்திரமேயன்றி முன்கொடுத்த பதினாயிரம் ரூபாயையும் கொடுத்துவிட்டான். அது முதல் அவன் தன் பெண்சாதியோடுகூடக் கொஞ்சகாலம் அங்கேயே சுகமாயிருந்தான். ஆயினும் வேட்டையிற் பழகினவனாதலால் வேட்டையாடுவதில் அபேக்ஷைமட்டும் அவனுக்கு ஒழியவில்லை. அப்பட்டணத்துக்குச் சமீபத்திலுள்ள காடுகளுக்கு அடிக்கடி போய் வேட்டையாடிக்கொண்டிருந்தான். அவன் போகுமிடமெல்லாம் அவனுடைய மிருகங்களும் கூடவேபோய்க்கொண்டிருந்தன.

அந்தப் பட்டணத்துக்கு அருகே ஒரு பெரிய காடு உண்டு. அதில் கொடியமிருகங்கள் அளவற்றிருக்கின்றனவென்று எங்கும் பிரசித்தியாயிருந்தது. அதைக் கேட்ட நாள்முதல் அவ்விடத்திற்குப் போய் வேட்டையாடவேண்டுமென்கிற அபேக்ஷை அவனுக்கு மிகவும் அதிகமாயிருந்தது. ஆயினும் அதை அரசன் சிலநாள்வரையில் வேண்டாமென்று மறுத்துக்கொண்டேவந்தான். என்னசொல்லியும் கேளாமல் அவன் ஒருநாள் அரசனை வருத்தி விடைபெற்றுக்கொண்டு அக்காட்டில் வேட்டையாடப் புறப்பட்டான். அவன் பின்னோடு அவனுடைய மிருகங்களும் இன்னும் பல வில்லாளிகளும் புறப்பட்டார்கள். அவர்களெல்லாரும் அந்தப் பெருங்காட்டிற் பிரவேசித்தவுடனே புள்ளிமான் ஒன்று தென்பட்டது. அதைப் பார்த்ததும் வேடன் தன்னுடன் வந்தவர்களையெல்லாம் அங்கேயே காத்திருக்கச்சொல்லித் தன் மிருகங்கள்மாத்திரம் பின்தொடர்ந்துவர அந்த மானைத் துரத்திக்கொண்டு ஓடினான். அவன் வரவை எதிர்பார்த்துநின்ற வில்லாளிகளெல்லாம் பொழுதுபோமளவும் அங்கேயே காத்துநின்று, அப்போதும் அவன் வராமையால் நிராசையாய்த் திரும்பி வீட்டுக்குப்போய், ஒரு புள்ளிமானைத் துரத்திக்கொண்டுபோன அரசன் இன்னும் திரும்பிவரவில்லையென்று தங்கள் அரசியோடு சொல்லிவிட்டார்கள். அச்செய்தியைக் கேட்டதுமுதல் அந்தப் பெண் அவன் எப்போது திரும்பிவருவானென்று அதேசிந்தையாயிருந்தாள்.

புள்ளிமானைத் துரத்திக்கொண்டுபோன வேடன் கதையைக் கேளுங்கள்: அந்த மான், கையில் அகப்படாமலே சற்றே கிட்ட வருவதும் சற்றே ஒதுங்கிப்போவதுமாய் மதியை மயக்கிக்கொண்டே வெகுதூரம் அவனை இழுத்துக்கொண்டுபோய், பொழுது போகிறதருணத்தில் மறைந்துபோய்விட்டது. அந்தக் காட்டுக்

குள் நெடுந்தூரம் வந்துவிட்டோமென்று அப்போதுதான் அவனுக்குத் தோன்றிற்று. தன் வில்லாளிகளெல்லாம் தன் கூச்சலைக் கேட்டு ஒருவேளை தன்னிடம் வருவார்களோவென்று வேட்டைக்குழாயையெடுத்தூதினுன். அதன் சத்தம் எவ்வளவுதூரம் போகும்! அது அவர்களுக்குக் கேட்கவுமில்லை; அவர்கள் அவனிடம்வந்து சேரவுமில்லை. அதற்குள் நன்ருய் இருண்டுபோகவே, இனி இங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்குப்போவது கூடாதென்று அங்கேயே இறங்கித் தீவளர்த்திக்கொண்டு அவ்விராப்பொழுதை அங்கேயே கழிப்பதாய்த் தீர்மானித்தான். அப்படி அவன் தன் மிருகங்களோடுகூடக் குளிர்காய்ந்துகொண்டு உட்காந்திருக்கையில், மனிதக்குரலாய் ஏதோ ஒரு சத்தங்கேட்டது; இதென்னவென்று நாற்புறமுஞ் சுற்றிப்பார்க்க ஒன்றையும் காணுமல் அண்ணுந்து பார்த்தான். அவன் பக்கத்திலிருந்த மரத்தின்மேல் ஒரு கிழவி உட்காந்து, ஐயோ! குளிர் நடுக்குகிறதேயென்று புலம்பிக்கொண்டிருந்தாள். அதைக்கேட்டு வேடன் அவள் உண்மையாகவே வருந்துகிருளென்றெண்ணி, குளிர்ந்தால் இங்கே இறங்கிவா; சுகமாய்க் குளிர்காய்ந்துகொள்ளலாமென, அவள், ஐயோ நான் மாட்டேன்; உன் மிருகங்கள் என்னைக் கொன்றுவிடும்; நான் இங்கிருந்து ஒரு கொடியைப்போடுகிறேன்; அதனுல் உன் மிருகங்களைத் தொடுவாயானுல் அவை அடங்கியிருக்கும்; பின்பு நான் அங்கே வருவேனென்றுள். அவள் ஒரு மாயக்காரியென்று தெரியாமல் அப்படியே ஆகட்டுமென்று அவன் சம்மதிக்க, அவள் ஒரு கொடியைக் கீழே எறிந்தாள். அந்தக் கொடி மேலே பட்டவுடனே அவையெல்லாம் கல்லாய்ப்போயின. அந்த மிருகங்கள் அசைவற்று நின்றுபோனதும் அவள் தான் கீழே இறங்கி வந்து அந்தக் கொடியால் அவ்வேடனைத் தொட்டாள். அவனும் உடனே கல்லாகமாறினுன். அதைக்கண்டு அந்த மாயக்காரி மிகவும் சந்தோஷமடைந்து, அதற்குமுன் இப்படியே அநேகர் கல்லாகப் புதைக்கப்பட்டிருந்த அந்தப் பூமியிலே குழிவெட்டி இவர்களையும் புதைத்துவிட்டுத் தன்னிடத்திற்குப் போய்விட்டாள்.

இப்படியே சிலநாள்சென்றது. தன் பிராணநாதன் போனவழி தெரியாமல், அரசன்மகள் நாளுக்குநாள் மிகவும் விசனம் அதிகமாகி மனம் வருந்திக்கொண்டிருந்தாள். இதிப்படியிருக்க, இவ்வேடனுடைய சகோதரன், தான் குறித்துப்போனவிடத்தில் தனக்கு யாதொரு பிழைப்பும் கிடைக்காமல், தன் மிருகங்களைக் கூத்தாடச்செய்து பிச்சைபுகுந்து ஜீவனஞ்செய்துகொண்டிருந்தான். இளவரசனுன வேடன் கல்லாய்ப்போனபோது ஒருநாள் அந்தச் சகோதரன் இவனை நினைத்துக்கொண்டு நம் சகோதரனுடைய செய்தி எப்படியிருக்கிறதோ பார்ப்போமென்று, முன் தாங்கள் இருவரும் பிரியும்போது ஒருவர்க்கொருவர் மற்றெருவனு

டைய க்ஷேமத்தைத் தெரிந்துகொள்ளும்படி, ஒரு மரத்தில் நாட்டி வந்த கத்தியைப் போய்ப்பார்த்தான். ஐயோ! இளவரசனுன வேடனுடைய பக்கம் பாதி துருப்பிடித்தும் பாதி பளபளப்பாயும் இருந்தது. அதைக்கண்டு அவன் தன் சகோதரனுக்கு ஏதோ பெருத்த அபாயம் ஒன்று நேரிட்டிருக்கிறதென்று அறிந்து மிகவும் விசனமடைந்து அவன் போன மேற்றிசைநோக்கிச் சென்றுன்.

அவன் புறப்பட்டுப் போனவழி அவனை அந்தப் பட்டணங்கொண்டுசேர்த்தது. அவன் அந்நகரம் போய்ச்சேர்ந்ததும் அங்கே தேடிக்கொண்டிருந்த தூதனொருவன் அவனைப்பார்த்து, தங்கள் இளவரசனும் அவனும் ஒரேசாயலாயிருப்பதையும், ஐந்து மிருகங்கள் பின்தொடர்ந்து வருவதையுங்கண்டு, நம்மிளவரசனே காட்டினின்றுந் திரும்பிவருகிறுனென்றெண்ணி, தாங்கள் வருவதை முன்னதாய் அரசர்க்குத் தெரிவிக்கலாமாவென்றுன். அதைக்கேட்டு அந்த வேடன், ஒகோ! இவன் நம் சகோதரனுக நம்மை நினைத்துப்பேசுவதுபோலக் காண்கிறது; நல்லது, நாமும் அப்படியே பாவித்திருப்போம். இதனுல் அவன் செய்தி நன்றுய்த் தெரியவருமென்று எண்ணி அந்தத்தூதனைப்பார்த்து, அப்படியே ஆகட்டும், அரண்மனைக்குப் போகலாம் வாவென்றுன். அந்தத் தூதன் அப்படியே முன்னே வழிகாட்டி அவனை அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோனுன். அங்கிருந்தவர்களெல்லாரும் அவனை மிகவும் பெருமையாய் எதிர்கொண்டுவந்து அரண்மனைக்கு அழைத்துக்கொண்டுபோனுர்கள். இளவரசியும் அவனைத் தன் கணவனென்றே நினைத்து, வேட்டையாடித் திரும்பிவர இத்தனைநாளேனென்றுள். அதற்கு அவன், திரும்பிவர வழி சுலபத்தில் அகப்படாமையால் இவ்வளவுகாலந் தாமதப்பட்டதென்று சொன்னுன்.

இப்படியே இரண்டொருநாள் அவன் அவ்வரசன் அரண்மனையிலேயே சுகமாயிருந்தானென்றுலும், தன் சகோதரன் செய்தியை அறிந்துகொள்ளவேண்டுமென்கிற ஆவலால் அப்பட்டணத்துக்குச் சமீபத்திலுள்ள கொடிய காட்டின் வரலாற்றைப்பற்றிக் கொஞ்சங்கொஞ்சமாய் விசாரித்துக்கொண்டேயிருந்தான். அதன் வரலாறு ஒருவாறு தெரிந்ததும் ஒருநாள் அவன், மறுபடியும் அக்காட்டிற்குப்போய் வேட்டையாடி வருகிறேனென்று சொல்லி, அரசனையும் தனக்கு மனையாளென்று பாவித்திருக்கும் அரசியையும் வருத்திச் செலவுபெற்றுக்கொண்டு, பல வில்லாளிகள் பின்தொடர்ந்து வரத் தன் ஐந்து மிருகங்களோடும் அக்காட்டிற்குச் சென்றுன். அதனுள் பிரவேசித்தவுடனே முன்போலவே அதே புள்ளிமான் அவன் கண்ணுக்குத் தோன்றிற்று. அதைக்கண்டு அவன் தனியே தன் மிருகங்களைமாத்திரம் கூட்டிக்கொண்டு அதைத் துரத்திக்கொண்டு ஓடினுன். அது அவனுக்கு ஆசைகாட்டி நெடுந்தூரம் இழுத்துக்கொண்டுபோய்ப் பொழுதுபோகிற தருணத்தில் மறைந்

துபோய்விட்டது. பின்பு திரும்பி வீட்டுக்குவர நேரமில்லாமை யால் தன் தம்பியைப்போலவே அவனும் நெருப்பு மூட்டிக்கொண்டு இராப்பொழுதை அங்கேயே கழிக்கும்படி இறங்கினன்.

அவன் இறங்கின சிறிதுநேரத்துக்கெல்லாம், முன் அவனுடைய தம்பிகண்ணுக்குப் புலப்பட்டதுபோலவே, ஒருத்தி, ஐயோ! குளிர் பொறுக்கப்போகவில்லையே! என்று புலம்பினவண்ணமாய் அவன் கண்ணுக்குந் தோன்றினள். அவளைப்பார்த்து அவன், குளிர் நடுக்கினல் இங்கே நெருப்பண்டைவந்து காய்ச்சிக்கொள்ளே னென, அவள், அங்கேவந்தால் உன் மிருகங்கள் கொன்றுவிடும்; இதோ இந்தக் கொடியால் அவற்றைத் தொடுவாயானல், பின்பு நான் இறங்கிவருகிறேனென்றுள். அதைக்கேட்டதும் அவன், ஓகோ! இதிலேதான் ஏதோ சூது இருக்கிறதென்று கண்டு, நான் அப்படி என் மிருகங்களைத் தொடமாட்டேன்; நீ இறங்கிவருகிருயா இல்லையா? வராவிட்டால் நான் அங்கேவந்து உன்னைக் கீழே தள்ளுவேனென்று சொல்லி வெருட்ட, அவள் நீ என்னை யாரென்று நினைத்தாய்! என்னைக் கண்ணெடுத்துப்பார்க்கவாவது உன்னல் ஆகுமா என்று சொல்லக்கேட்டு, அவன், இறங்கிவருகிருயா, உன்னை இப்படியே சுட்டுவிடட்டுமாவென்று கோபமாய்ப் பேசினன். அதற்குஅவள், இந்தப்பேச்சுக்கெல்லாம் நான் பயப் படுகிறவளாவென்று சொல்லிச் சிரித்தாள்.

அதைப்பார்த்து அவன் மிகக்கோபங்கொண்டு, தன் துப்பாக்கியை எடுத்து அவள்மேல் வெடிதீர்த்தான். அது அவளைத் தாக்கமாட்டாமற்போகவே, அவள் முன்னினும் அதிகமாய் நகைத்து ஏன் கைநோக வீணே வருந்துகிருய் என்றுள். அந்தப் பரிகாசப் பேச்சைக் கேட்டுப் பொறுக்கமாட்டாமல் வெள்ளிக்குண்டுகளை வைத்தடிக்க, அவள் அதைத் தாளத் திறமையில்லாமல் வீரிட்டுக் கொண்டு கீழே வீழ்ந்தாள். வீழ்ந்ததும் அவன், அடி, மூழுமோசக்காரி! என் தம்பி எங்கே இருக்கிறன்; அதைச் சொல்லாவிட்டால், உன்னை இப்படியே குண்டாய்க் கட்டித் தீயிலே தள்ளி விடுவேனென, அவள் மிகவும் பயந்து, ஐயா! என் உயிரை மாத்திரம் மிருத்துமையா! எல்லாச் செய்தியையும் உம்முடன் சொல்லிவிடுகிறேனென்று அவனை வேண்டிக்கொண்டு, உன் தம்பியும் அவனுடைய மிருகங்களும் கல்லாக மாற்றப்பட்டு, இதோ இந்தப் பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்கிருர்களென்றுள். அதைக் கேட்டு அவன் மறுபடியும், நீ இங்கே புதைத்திருப்பவர்களெல் லோரையும் உடனே அவரவர் சுபாவப்படி மாற்றுகிருயா, உன்னை இப்படியே தீயிலே தள்ளிவிடட்டுமா என்று அவளைத் திரும்பியும் அதட்டிக்கேட்க, அவள் நடுநடுங்கி, அந்தப் பூமியில் புதைத்திருந்த கற்களையெல்லாம் பெயர்த்து ஒரு கொடியால் அவைகளை யெல்லாந் தடவினுள். உடனே அவனுடைய தம்பி தன் மிருகங்

களோடு எழுந்ததுமாத்திரமேயன்றி, வீரர்களும் வில்லாளிகளும் வேலைக்காரர்களுமாய்ப் பின்னும் அநேகர் எழுந்து யாவரும் மிகுந்த சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் வீடுபோய்ச் சேர்ந்தார்கள்.

நெடுநாளாய்ப் பிரிந்திருந்த அண்ணன் தம்பிகள் இருவரும் ஒருவர்க்கொருவர் பார்த்துப் பேரானந்தமடைந்து கட்டி முத்தமிட்டுக்கொண்டு, பின்பு அந்த மாயக்கிழவியைக் கட்டித் தீயிலே தள்ளிவிட்டார்கள். அவள் வெந்துபோனவுடனே அந்தக் கொடிய பயங்கரமான காடுமுழுதும் மறைந்து எங்கும் வெளியாய்விட்டது.

பிறகு அந்தச் சகோதரர்கள் இருவரும் தங்கள் கதையைச் சொல்லிக்கொண்டு பட்டணத்திற்குப் போகப் புறப்பட்டார்கள். நடுவழியிலே இளையவன் மூத்தவனைப்பார்த்து, நான் இப்பட்டணத்திற்கு இளவரசனாய் ராஜகாரியங்களையெல்லாம் நானே பார்த்துவருகிறேனென்று சொல்ல, மற்றொருவன், ஆம், அவையெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும்; நான் புதிதாய் இப்பட்டணத்திற்கு வந்தபோது யாவரும் என்னை நீயென்றே நினைத்து உன்னைப்போலக் கொண்டாடினார்கள். உன் மனையாட்டிகூட என்னைத் தன் சொந்தக்கணவனாகவே நினைத்திருந்தாளென்றான். அந்தப் பேச்சைக் கேட்டதும் அவன் மிகக்கோபங்கொண்டு கத்தியை எடுத்து அவன் கழுத்தை வெட்டிவிட்டான்; வெட்டினதும் அவன் கழுத்தினின்றும் ரத்தம் ஆறாய்ப் பெருகக்கண்டு மிகவும் விசனமடைந்து, ஐயோ! என்னைப் பிழைப்பித்த பெருமானை நான் கொன்றுவிட்டேனே! என்னைப்போலப் பாவி உலகில் வேறே யாருண்டு என்று சொல்லிப் புலம்ப, உடனே அவனுடைய முசல் காட்டுக்கு ஓடி, முன்போலவே உயிருண்டாக்கும் மூலிகைகளைக் கொண்டு ஓடிவந்து, அவனுடைய அறுந்ததலையை ஒன்றாய் ஒட்டி உயிர் உண்டாக்கிச் சிறிதளவும் காயம்தெரியாமல் ஆற்றிவிட்டது. இப்படித் தமையன் பிழைத்தெழுந்ததைப்பார்த்துத் தம்பி சந்தோஷமடைந்து அவனை அணைத்து ஆநந்தக்கண்ணீர் பெருக்கினான்.

பட்டணத்துக்கருகே போகையில் இளையோன் மூத்தோனைப் பார்த்து, நாம் இருவரும் ஒரேவிதமான ராஜவேஷமே தரித்திருக்கிறோம்; ஒரேவிதமான மிருகங்களே நம்மைப் பின்தொடர்ந்து வருகின்றன. ஆதலால் நாம் இருவரும் இரண்டுவழியால் இப்பட்டணத்துக் கோட்டைக்குள்ளே புகுந்து ஒரேகாலத்தில் அரசன் எதிரேபோய் நிற்போமென்றான்.

அப்படியே இருவரும் பிரிந்து இரண்டுவழியாய்ச் சென்று ஒரேகாலத்தில் அரசன் எதிரேபோய் நின்றார்கள். அவர்கள் இருவரையும் ஒரேகாலத்தில் கண்டு அரசன், தன் மருமகன் இன்னானென்று தெரிந்துகொள்ளமாட்டாமல், தன் மகளை வரவழைத்து, இவர்களுள் உன் கணவன் எவனென்றுகேட்டான். அவர்கள் இருவரும் வடிவழகில் வேற்றுமையில்லாமலிருந்ததனால், அவளும்

தன் கணவன் இன்னானென்று கண்டு சொல்லமாட்டாமல் தவித்து நின்றாள். பின்பு அவள் கொஞ்சநேரம் ஆலோசித்துத் தான் கொடுத்த மணிவடங்களை நினைத்துக்கொண்டு அவ்விருவருடைய மிருகங்களையும் பார்க்க, ஒருவனுடைய மிருகங்களுக்குக் கழுத்தில் மணிமாலையில்லாமலிருக்கவே, எவருடைய மிருகங்களுக்குக் கழுத்தில் மணிமாலையிருக்கின்றதோ அவரே என் பிராணநாதரென்றாள். அதைக்கேட்டுச் சிறியவேடன் கொஞ்சம் புன்னகை நகைத்து, ஆம், சரிதானென்றான். பின்பு அவர்களெல்லோரும் சந்தோஷமாய் அவ்வரண்மனையில் உட்கார்ந்து நெடுநேரம் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். பின்பு இளவரசி தன் நாயகனைப் பார்த்து, நீ சென்ற இரண்டுநாளாய் நம் பஞ்சணையின்மேல் கத்தியை நாட்டிவைத்தாயே? அது யாதுகாரணமென்றாள். அதைக் கேட்டு அவன், இது நம் அண்ணனுடைய செய்கையல்லவா! அவன் எவ்வளவு சத்தியசந்தனென்று அவனை மிகவும் கொண்டாடி, அவனையும் அப்பட்டணத்திலேயே வைத்துக்கொண்டு சுகமாயிருந்தான்.

சமாசாரம்.

ஆப்கன்தேசத்துச் சண்டையின் முடிவு.—நெடுநாளாய் இத்தேசமெங்கும் பெருங்கூச்சலாயிருந்த ஆப்கனிஸ்தானத்துச் சண்டை இப்போது சமாதானமாய் முடிவுபெற்றது. இருதிறத்தாரும் சமாதானமாய்ப் போனதும், இப்போது ஆப்கனிஸ்தானத்து அமீராயிருக்கின்ற யாகூப்கானென்பவர் பின்வருமாறு ஒரு விளம்பரம்செய்தார். அதாவது: அங்கிலேய துரைத்தனத்தார்க்கும் ஆப்கன் துரைத்தனத்தார்க்கும் சமாதானமும் நேசக்கட்டுப்பாடும் நிலையாயும் உறுதியாயும் ஸ்தாபிக்கப்பட்டபடியால், இத்தனைகாலமாய் இவ்விரண்டு துரைத்தனத்தார்க்குமிருந்த சச்சரவுகளும் விரோதங்களும் இன்றோடு நீங்கிப்போயின. இத்தனைநாளாய் அங்கிலேயப்படைகளோடு போராடிக்கொண்டிருந்த ஆப்கன்தேசத்துக் குடிகளெல்லாம் அடங்கி ஒற்றுமையாயினார்கள் என்று இவ்வாறு பிரசித்தப்படுத்தினார். இப்படி இந்தச் சமாதான உடன்படிக்கை உண்டானகாலத்தில் அந்தப் பட்டணம் முழுதும் தீபாலங்காரம் முதலியவைகளால் அழகுசெய்து மிகவும் பெருமையாய்க் கொண்டாடினார்களாம். இப்படி ஆப்கன்தேசத்து யுத்தம் நன்கு முடிவுபெற்றதுநிமித்தம் அதன் பெருமைக்காகவும், நம் மகாராணியார்க்கு முகோல்லாசமாகவும், இந்தூரில் ஹோல்கார் மகாராஜா ஒரு மகா சபை சேர்த்து மகிழ்ச்சியடைந்தார்.

ஆப்ரிகாதேசத்துச் சண்டை.—இவ்விடத்து யுத்தம் இன்னும் முடிவு பெறவில்லை; ஒருவிதக் கைச்சண்டைபோல நடந்துகொண்டிருக்கின்றது. இப்போது அவ்விடத்தில் பிரின்ஸ் இம்பீரியல் என்னும் பிரான்சு தேசத்துச் சிற்றரசன் அத்தேசத்துக் காபிரிஜனங்களின் கையில் அகப்பட்டுக் கொண்டு அநியாயமாய் மாண்டுபோனான்.

Printed at the S. P. C. K. Press, 1879.



CALCUTTA IN 1845.
கல்கத்தா நகரம்.